# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசரியா, நேசபாய்- சென்னை, வில்சன் மேரி,ரூபெல்லா மேரி, ஜோஸ்பிட்டா மேரி, எதெல்பெர்கா- திருச்சி,ஜெயசேகரி - கொடைக்கானல், ஜெரின் மேரி, மிரியம், ஸ்டெல்ல ரோஸ்- திண்டுக்கல், லில்லி புஷ்பம், மேரி மெளரிஸ், ஜூ லி எலிசபெத்- தஞ்சாவூர், ஜான்சி மேரி, இரஞ்சிதம், விமல் மேரி, லில்லி இஸபெல்லா மேரி, குளோரி சிறுமலர் - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், அர்மெல்லா - கன்னியாகுமரி, புஷ்ப மேரி - சிவகங்கை, பிரேமா, சீரோன், தெரஸிட்டா - நெல்லை, வித்யா மேரி, மரிய சூசை ரூபி- தூத்துக்குடி, சகாயம் - கடலூர், சலேத் மேரி -திருப்பூர் லூக்காஸ் மேரி, ஜார்லத் புஷ்பா, அனன்சியா மேரி, டோம்னா மேரி, பவுலின் மேரி - கும்பகோணம். .

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா,ஜேடன், ஆனி பீட்டர் ராஜ், ஜான் ஜோசப், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா,மேரி மார்கிரேட், நான்சி பியூலா, செலின் மேரி, பாத்திமா, கிளாரா லூர்துமேரி, ஜெகரட்சகன் ஜோசப் - திருச்சி; புஷ்பக்கண்ணு, மிக்கேல் சாமி - கோயம்புத்தூர், சிப்ரியன்-தெளி, மேரி - இளையரசனேந்தல், ஜோஸ்பின் சகாய ராணி - கும்பகோணம், கனிஷியஸ் விஷால், நிர்மலா யூஜின், வியாகுல மேரி ஜெபமாலை -சென்னை, மார்கிரேட் பெல்சியா, அமல செல்வி, அற்புத சீலி, லீலாவதி, ஜோஸ்பின் மேரி, *இருதய விஜில்லா* - திண்டுக்கல், ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மரிய பிரகாசம் - தர்மபுரி, ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், தென்னரசு - தூத்துக்குடி.

**குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்**

**அருட்சகோதரி. குளோரி சிறுமலர் - மதுரை**
**திருமதி. ஜெபமாலை - சென்னை**

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# வலிகள்

## பதிப்பாசிரியர் பக்கம்

ந.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியின் பக்தர்களே உடனிருப்பு என்பது கிறிஸ்தவ வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்று. கடவுள் இந்த உலகத்தை படைத்த காலம் முதல் தொடர்ந்து தான் படைத்த உலக மக்களோடு உடனிருந்து வருகின்றார். பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்து கடவுள் இஸ்ரயேல் மக்களோடு தொடர்ந்து இயற்கையின் மூலம் உடனிருந்து வருகின்றார்.

தன்னுடைய உடனிருப்பை இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக துன்பப்பட்டுக் கொண்டிருக்கும்போது அந்த மக்களுக்கு விடுதலை அளிப்பதற்காக மோசே மூலமாக தன்னுடைய உடனிருப்பை வெளிப்படுத்தியவர், இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் பயணம் செய்யும்போது பகலில் மேகத்தூணாகவும் இரவில் நெருப்புத்தூணாகவும் தன்னுடைய உடனிருப்பைக் காட்டியவர், உடன்படிக்கைப் பேழையின் மூலம் தொடர்ந்து தன்னுடைய உடனிருப்பை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார். இன்றும் தன்னுடைய ஒரே மகன் மூலமாக நற்கருணை வடிவமாக தன்னுடைய உடனிருப்பை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார்.

கடவுளுடைய உடனிருப்பு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே அளவுக்கு சக மனிதருடைய உடனிருப்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. மனிதரின் அதிகபட்ச எதிர்பார்ப்பு என்பது தனக்கென்று ஒரு மனிதர் உடனிருக்கின்றார்,

## உள்ளே

கதையினில் கலந்த மரியா - 05
வாழும் இறைவன் வடிவமைத்த மடல் மரியா - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
மன்றாட்டு - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் - 28
அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

தன்னுடைய சுக துக்கங்களையும் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ள ஒருவர் இருக்கின்றார் என்ற மனப்பான்மையோடு வாழ்வதுதான். பிறருடைய சுக துக்கங்களை பகிர்ந்து கொள்வதில் நம் அனைவருக்கும் முன்மாதிரி நம் அன்னை மரியாள். தேவையில் இருப்போருக்கு தேடிச் சென்று உதவும் குணம் படைத்தவர். இதோ நான் உங்களுக்காக இருக்கின்றேன் என்று உடனிருப்பவள்.

தன்னுடைய உறவினரான எலிசபெத் தன்னுடைய முதிர்ந்த வயதில் கருவுற்றிருக்கின்றார் அவருக்கு உதவுவதற்கு யாரும் கிடையாது என்ற நிலையில் இருக்கும்போது அவரோடு சில காலம் உடனிருந்து அவருக்கு உதவியவர்தான் நம் அன்னை மரியா. பொதுவாக மனிதர்கள் சக மனிதருக்கு உதவுவது இயல்பான ஒன்றுதான். ஆனால் அன்னை எந்த நிலமையில் இருக்கும்போது எலிசபெத்துக்கு உதவினாள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எலிசபெத்துக்கு உதவ சென்ற அன்னை மரியாள் ஆரோக்கியமான உடல்நிலையோடும், தெளிவான மனநிலையோடும் இருந்தாளா? என்றால் கிடையாது.

அன்னை மரியாள் ஆரோக்கியமான உடல்நிலையோடு கிடையாது, காரணம் அவளும் கருவுற்றிருந்தாள். கருவுற்றப் பெண்கள் இயற்கையாகவே சந்திக்கின்ற உடல்நலன் சார்ந்த பிரச்சனைகளை நிச்சயம் அன்னை மரியாள் சந்தித்திருப்பாள். தன்னுடைய உடல்நலன் நன்றாக இல்லாதபோதும் தொடர்ந்து எலிசபெத்தை கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொண்டாள். எலிசபெத்தை சந்திக்க சென்ற அன்னை மரியாள் தெளிவான மனநிலையோடு சென்றாளா? என்றால் அதுவும் கிடையாது. ஏற்கனவே கபிரியேல் தூதரின் வார்த்தைக்கு இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே என்று கேள்விக் கேட்டவள். திருமணத்திற்கு முன்பு கருவுற்றிருப்பது யூத சமூகத்திற்கு மட்டும் தெரியவந்தால் அன்னை மரியாளுக்கு மரணம் நிச்சயம். அதே நேரத்தில் தன்னை திருமணம் செய்ய இருக்கும் புனித யோசேப்புக்கும் தான் எவ்வாறு கருவுற்றிருக்கின்றேன் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் அதையும் அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும் இத்தனை மன ஓட்டங்களுக்கு மத்தியில்தான் அன்னை மரியாள் எலிசபெத்தோடு உடனிருக்க செல்கின்றார்.

தன் உறவினர் எலிசபெத்துக்கு உதவ வேண்டும் என்ற நம் அன்னை மரியாளின் ஆசைக்கு தடையாக அவர்களின் கண்முன்னால் இருந்த தடைகள் வெறும் உடல்நிலை மற்றும் மனநிலை சார்ந்த பிரச்சனைகள் மட்டுமல்ல. புவியியல் சார்ந்த பிரச்சனையும்தான். எலிசபெத் வாழ்ந்த பகுதி என்பது யூதேயா மலைப்பகுதி. மலைப்பகுதியில் வாழ்வது என்பது மிகவும் சவாலான வாழ்க்கை வாழ்வது. மலைப்பகுதியில் பாதுகாப்பு குறைவாக இருக்கும் காட்டு விலங்குகளால் அச்சுறுத்தல் அதிகமாக இருக்கும். மலைக்கு செல்வதற்கான பாதைகள் ஒழுங்காக இருக்காது. இத்தனை தடைகள் அன்னை மரியாள் முன்பாக இருக்கிறது. அந்தக் காலகட்டத்தில் நடைப்பயணமாகதான் செல்ல வேண்டும். கொள்ளையர்களாலும் எப்பொழுது வேண்டுமென்றாலும் பாதிப்பு வரலாம். இருந்தும் அன்னை மரியாள் தன்னுடைய முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. எலிசபெத்துக்கு உதவி செய்தே ஆகவேண்டும் என்று மலைப்பகுதியில் பயணம் செய்கின்றார். எலிசபெத்தை சந்தித்தவர் தொடர்ந்து அவருக்கு தன்னுடைய உடனிருப்பின் மூலம் உதவி செய்கின்றார்.

**உடனிருப்பு ஒவ்வொரு மனிதரின் தனிப்பட்ட எதிர்பார்ப்பு**





# கண்ணீர் அஞ்சலி



**பல வருடங்களாக ஆகட்டும் இதழில் குறுக்கெழுத்துப் போட்டியை எழுதி நடத்தி வந்த திரு. பெனடிக்ட் அமல்ராஜ் அவர்கள் 18.04.2025 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவருடைய பிரிவால் வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கு ஆகட்டும் இதழின் ஆசிரியர்கள், வாசகர்கள் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். இவருடைய ஆன்மா கடவுளில் இளைப்பாற வேண்டுகிறோம்.**

குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்சகோ. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

ஏப்ரல் மாதம் 5 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**சோழிங்கநல்லூர்**

கடந்த வருடம் என்னுடைய ஊருக்கு சென்றபோது ஒரு தம்பதிக்கு ஏழு ஆண்டுகளாக குழந்தை இல்லை. நான் எப்பொழுதுமே மாதாவிடம் ஜெபித்த வளையல் வைத்திருப்பேன். அதை அவர்களிடம் கொடுத்து ஜெபியுங்கள் கண்டிப்பாக உங்களுக்கு குழந்தை கொடுப்பார் என்று சொன்னேன். அதேபோல் கடந்த மாதம் அவர்களுக்கு இரட்டை குழந்தைகள் பிறந்து இருக்கிறது. ஒரு ஆண் மற்றும் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**காணிக்கை மேரி – தர்காஸ்**

ஜனவரி 2ஆம் தேதி அன்று அடுப்பை பத்த வைக்கும்போது பெட்ரோல் ஊற்றி பத்தவைப்போம். அப்பொழுது என்னுடைய காலில் ஊற்றி புடவை முழுவதும் பற்றிவிட்டது. இரண்டு மணி நேரமாக எனக்கு நினைவே இல்லை. அதன் பிறகு நான் பார்த்தபோது எனது கால் முழுவதும் வெந்து போயிருந்தது. மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். மருந்து ஊசி போட்டபிறகு அதிக வலியாக இருந்தது. இரண்டு மாதங்களாக நான்கு மருத்துவமனைக்கு சென்று பார்த்தாலும் எதுவும் ஆகவில்லை. என் கால் வீங்கி போயிருந்தது. கடந்த மாதம் நான் இங்கு கால் புண்களோடு வந்து அழுது ஜெபித்தேன், எனக்கு கால் வலிக்கிறது அடுத்த மாதம் நான் இங்கு வந்து சாட்சி சொல்ல ’வேண்டும் என்று. அதேபோல இங்கு வந்து இப்பொழுது நான் சாட்சி சொல்கிறேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மோட்ச மேரி – தர்காஸ்**

நேற்று இரவு எனக்கு சரியாக கால் வலித்தது நடக்கக்கூட முடியவில்லை. மருந்து தேய்த்துவிட்டு நான் படுத்தேன். ஆனால் வலி அதிகமாக இருந்தது. இரண்டு மணிக்கு எழுந்து ஐந்து அருள் நிறைந்த மரியே ஜெபம் சொல்லிவிட்டு திரும்பவும் படுத்தேன். காலை 5 மணிக்கு எழுந்து பார்த்தபோது எந்தவிதமான ஒரு வலியும் இல்லாமல் இருந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு மலை கிராமத்தில் ஓர் விவசாயி இருந்தார். அவருக்கு ஒரு பெரிய தோட்டம் இருந்தது. இவர் சரியாக திட்டமிட்டு பல வகையான மரங்கள், செடிகள், கொடிகள் என்று நட்டு வளர்த்து வந்தார். அதற்கென்று சிறப்பான முறையில் நீர் பாசனத்தையும் அமைத்து இருந்தார். பல ஆண்டுகள் கழிந்த பிறகு இத்தோட்டத்தில் இருந்து அதிகமாக வருமானம் கிடைத்தது. அந்த கிராமத்தில் இருந்த ஒருசிலருக்கு இது பிடிக்கவில்லை. ஏதாவது வகையில் இவருக்கு இடையூறு கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டார்கள். அதில் ஒருவன் நள்ளிரவில் தோட்டத்திற்கு சென்று மரங்களை வெட்டி வீழ்த்த திட்டமிட்டான். இரவில் தோட்டத்திற்கு சென்று தோட்டத்தின் ஒரு பகுதியில் உள்ள மரங்களை வெட்ட ஆரம்பித்தான். ஒரு பெரிய மரத்தை வெட்டும்போது மரம் அவன் மேல் விழுந்தது, உயிருக்கு போராடிக் கொண்டிருந்தான். காலை வேளையில் தோட்டத்தின் உரிமையாளர், அரிவாள், சுத்தி, வாள் ஏந்திய 10 நபரோடு தோட்டத்திற்கு வந்தார். தோட்டத்தின் உரிமையாளர் அதிர்ச்சியுற்று ஓடி சென்று அவரை தூக்கினார். ஏன் இப்படி செய்தாய் என்று கேட்டார்? அவன் உமக்கு துன்பம் விளைவிக்க நினைத்து மரத்தை வெட்டினேன். அது எனக்கு ஆபத்தாகிவிட்டது என்றான். தோட்ட உரிமையாளர் அட முட்டாளே இந்த மரங்களை எல்லாம் வெட்டதான் நானும் வந்திருக்கிறேன். இங்கு ஒரு வீடு கட்டப் போகிறேன், நீ அவசரப்பட்டுவிட்டாய் என்று கூறினார்.

தீதும் நன்றும் பிறர்தர வாரா என்று கூறுவார்கள். பேராசையும் பெரும் பொறாமையும்தான் பலருடைய துன்பங்களுக்கு காரணம். மத்தேயு 26:15 இயேசுவை நான் உங்களுக்கு காட்டிக் கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்? என்று யூதாஸ் கேட்டான். பிறரின் துன்பத்தில் ஆதாயத்தை தேடுபவர்கள் இவ்வுலகில் அதிகம். ஆனால் மரியாவும் இயேசுவும் துன்பங்களை தாங்கிக் கொண்டு பிறருக்கு வாழ்வு கொடுத்தனர். தன்னை முழுமையாக கடவுளுக்கு அர்ப்பணித்து தன் மகனை முழுமையாக மக்களுக்கு அர்ப்பணித்து உயிர்ப்பின் வழியாக அமைதியை பெற்றுக் கொடுத்தவர் அன்னை மரியா. அன்னையை போல் ஆதாய நோக்கத்தை விட்டு அர்ப்பண நோக்கத்தை தழுவி ஆண்டவரின் உயிர்ப்பில் ஆர்ப்பரிப்போம்.

**HAPPY EASTER**

# வாழும் இறைவன் வடிவமைத்த மடல் மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

பாஸ்கா பெருமகிழ்வில் நாம் அனைவரும் திளைத்திருக்கின்றோம். மீட்பின் வரலாற்றில் மிக முக்கிய இந்நிகழ்வோடு புனித கன்னிமரியா நெருங்கிய தொடர்புடையவர். விண்ணக அரசியே அகமகிழும் அல்லேலுயா! என்று மூவேளை வேண்டலின்போது திருஅவை குரலெடுத்து அவரைப் பாடி மகிழ்கின்றது. புதிதாக மலர்ந்திருக்கும் மே மாதம் அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். இம்மாதத்தில் மரியாவிற்கு இரண்டு நினைவு நாட்களையும், ஒரு விழாவையும் சிறப்பிக்கின்றோம். மே 13, புனித பாத்திமா அன்னையின் நினைவு நாள். மே 24 கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் நினைவு நாள். மே 31, புனித கன்னிமரியா எலிசபெத்தை சந்தித்த விழா. இம்மாதமும் இவ்விழாக்களும் நமக்கு தரும் செய்தி என்ன? நாம் இறைவேண்டலிலும் தவத்திலும் ஈடுபட வேண்டும். மரியா என்னும் நமக்கு உதவி புரியும் சகாய அன்னையாக இருப்பது போல நாமும் மற்றவர் மீது உண்மையான அக்கறை உள்ளவர்களாக வாழ வேண்டும் வயது முதிர்ந்த தனது உறவினரை சந்தித்த மரியா, தேவையில் இருப்போரைத் தேடிச் செல்ல நமக்கு அழைப்பு விடுக்கின்றார். பரிவும் ஆறுதலும் கொண்டு முதியோரை அரவணைத்துப் பாதுகாப்பவர்களாக, அவர்களுக்கு இறைவனின் அன்பு, இரக்கம்நிறை முகத்தைப் பிரதிபலிப்பவர்களாக கிறிஸ்தவர்கள் அனைவரும் வாழ வேண்டும் என மரியா நமக்கு அறிவுறுத்துகிறார். எனவே இம்மாதத்தில் வெறும் பக்திக் கொண்டாட்டங்களில் நிறைவடையாமல், அன்னையின் எடுத்துக்காட்டான வாழ்வை வாழ நாம் முயற்சி எடுப்போம். 'வாழும் இறைவன் வடிவமைத்த மடல் மரியா'' என்ற கட்டுரையை இவ்விதழ் சுமந்து வருகிறது. மரியாவை இறைவனின் ஒப்பற்ற காவியமாக, அழகோவியமாக நினைந்து புகழ்ந்து பாடுகின்றோம். அந்த வகையில் மரியாவை, இறைவன் தனது விரலாலே எழுதித் தந்த ஒரு மடலாக, கடிதமாகப் பார்க்கின்றோம். அம்மடலில் இறைவன் என்ன எழுதியிருக்கின்றார் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**மரியா என்னும் மடலின் அழகு**

டிஜிட்டல் உலகில் நுழையுமுன் கடிதங்கள் மனிதர் வாழ்வில் பெரும் பங்கினை வகித்தன. பாசமுடனும் பாராட்டியும் எழுதப்பெற்ற கடிதங்களை பொக்கிஷமாகப் பாதுகாத்து அடிக்கடி வாசித்து நம்மையே உற்சாகமூட்டினோம். நாம் அனைவரும் இறைவனின் அன்பான கடிதங்களே. அவைகளில் அவர் தொடர்ந்து எழுதியும் வரைந்தும் வருகிறார். புதிய ஏற்பாட்டில் திருத்தூதர்களான பவுலடியார் யாக்கோபு, பேதுரு, யோவான், யூதா ஆகியோர் திருமுகங்கள் அல்லது மடல்களை எழுதியுள்ளனர். குறிப்பாக பவுலடியாரின் 14 திருமுகங்களையும் அவரது வாழ்க்கைப் பின்னணியில் வாசிக்கும் போது கிறிஸ்தவ உண்மைகளை ஆழமாகக் கற்றுக் கொள்ள முடிகிறது. அவரது வாழ்க்கையைப் பற்றியும் நாம் அறிகிறோம்.

புனித பவுலடியார் கொரிந்து நகர மக்களுக்கு எழுதிய மடலின் ஒரு பகுதி நம்மை அதிகம் சிந்திக்க வைக்கிறது. 'எங்கள் பணிகள் வாயிலாக கிறிஸ்து எழுதும் கடிதம் நீங்களே என்பது வெளிப்படை. அது மையினால் எழுதப்பட்டது அல்ல் மாறாக வாழும் கடவுளின் ஆவியாரால் எழுதப்பட்டது. கற்பலகையில் அல்ல் மாறாக மனித இதயமாகிய பலகையில் எழுதப்பட்டது (2 கொரி 3:2-3). இதைப் போன்றே மரியாவும் கடவுளுடைய கடிதம் என்று புகழ் பெற்ற இறையியலார் ரெனியரோ கூறுகின்றார். தனது கூற்றைப் பின்வருமாறு விளக்குகிறார். 'மரியா திருஅவையின் ஒரு பாகமாக இருக்கிறார். மற்றவரைப் போன்று அவர் வெறும் உறுப்பினர் மட்டுமல்ல மாறாக திருஅவையின் உருவமாக இருக்கின்றார். அவர் ஒரு கடிதம். இக்கடிதம் மையினாலோ, தாளிலோ, கற்பலகையிலோ எழுதப்பட்டது அல்ல. மாறாக அவரது இதயமாகிய பலகையில் எழுதப்பட்டது. தாய்க்குரிய இதயத்தையும் ஒரு நம்பிக்கையாளருக்குரிய இதயத்தையும் ஒருசேரக் கொண்டிருக்கும் அவரது இதயமாகிய பலகையில் எழுதப்பட்டிருக்கும் கடிதம்





மனிதத் தன்மையோடு தொடர்புடையது. யோவான் 2:4 –ல் காணப்படும் அம்மா என்றச் சொல்லுக்கும் யோவான் 19:26-ல் காணப்படும் அம்மா (இவரே உம் மகன்) என்ற சொல்லுக்கும் தொடர்பு இருப்பதை புனித அகஸ்டின் தெளிவுபடுத்துகிறார். இந்த இரண்டு சொற்களுமே மொழியாக்கத்திற்காக அம்மா என்றச் சொல்லில் இறைவார்த்தை தரப்பட்டுள்ளது. பெண்ணே என்றச் சொல்லே சாலச் சிறந்த சொல்லாகும்.

மகனே திராட்சை இரசம் தீர்ந்து விட்டது என்று சொல்கின்ற அன்னை மரியாவை ஆண்டவர் இயேசு கிறிஸ்து அறிந்து கொள்ளவில்லை. அறிந்து கொள்ளவில்லை என்று சொல்வதைவிட தனது இறைச் சாயலிடம் உதவி கேட்கும் அன்னை மரியாவிடம் சிலுவையில் தொங்கும் நேரத்தை குறிப்பிட்டே சிலுவையில் மனித சாயலில் தொங்கும் அந்த நேரத்தை குறிப்பிட்டே எனது நேரம் இன்னும் வரவில்லையே என்று தமது மனிதச் சாயல் பற்றி பதிலைத் தருகிறார் இயேசு.

புனித அகஸ்டின் முன்னதாக அறிந்து கொள்கிற கொள்கையை அதிகமாக (Predestination) எடுத்துரைத்தவர். எனவே அந்தக் கொள்கையைப் பயன்படுத்தி தன் தாயை ஆண்டவர் இயேசு முன்னதாக அறிந்து வைத்திருக்கிறார். எனவே தன் தாயை பெருமைபடுத்தும் விதமாகவே எனது நேரம் இன்னும் வரவில்லையே என்ற பதிலைத் தருகிறார் என்று கூறுகிறார். மரியாவிடம் பிறந்து வந்த தன் மனித சாயலை பெருமைபடுத்தும் விதமாக ஆண்டவர் இயேசு இப்பதிலைத் தருகிறார். தான் சிலுவையில் தொங்கும் நேரத்தை முன் அறிந்தவராக இயேசு கிறிஸ்து இப்பதிலைத் தருகிறார். சிலுவையில் தொங்கப்போகும் அன்னை மரியாவிடம் இருந்து வந்த அந்த மனிதசாயல் (மனித உடல்) அந்த நேரத்தைப் பற்றி முன் அறிந்தவராக இப்பதிலைத் தருகிறார். எனவே புனித அகஸ்டின் தெளிவுபடுத்தும் உண்மை இதுதான். சிலுவையில் இறப்பது கிறிஸ்துவின் தெய்வீக சாயல் அன்று மாறாக அது அன்னை மரியாவிடம் இருந்து வந்த மனிதச் சாயல் என்று தெளிவுபடுத்துகிறார்.

**முன்னதாகவே அறிந்திருந்தவர் இயேசு**

புனித அகஸ்டின் பார்வையில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம் தாய் மரியாவை முன்னதாக அறிந்திருந்தார் என்ற கொள்கையை மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கிறார். எந்த அளவுக்கு வெளிப்படுத்துகிறார் என்றால் அன்னை மரியாவிடம் பிறப்பதற்கு முன்பே தன் தாய் மரியாவை ஆண்டவருக்கு தெரியும் என்று தெளிவுபடுத்துகிறார். யோவான் 8:57-58 யூதர்கள் அவரை நோக்கி உனக்கு இன்னும் ஐம்பது வயது கூட ஆகவில்லை. நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயா? என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம் ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்ற இறைவார்த்தையை மேற்கோள் காண்பித்து அன்னை மரியாவிடம் தாம் பிறக்கும் முன்னரே தம் தாயை அவர் அறிந்திருந்தார் என வெளிப்படுத்துகிறார். ஆண்டவர் இயேசு தன் தாயை எப்பொழுதுமே பெருமைப்படுத்துகிறார். தாம் அவரிடம் நின்று பிறக்கப்போவதை தெரிந்து அவரை பெருமைப்படுத்துகிறார். பிறந்த பிறகும் பெருமைப்படுத்துகிறார். சிலுவையில் தொங்கும் நேரத்திலும் பெருமைபடுத்துகிறார். உயிர்ப்பிற்கு பிறகும் தன் தாயை பெருமைப்படுத்துகிறார்.

**விண்ணக மண்ணக கடவுள் - ஆண்டவர் இயேசு**

காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார் என்ற பவுலடியாரின் வார்த்தையை (கலாத்தியர் 4:4-7) மேற்கோள் காண்பித்து புனித அகஸ்டின் ஆண்டவர் கிறிஸ்துவை விண்ணக மற்றும் மண்ணக கடவுள் என்று கூறுகிறார். ஆண்டவர் இயேசு விண்ணக கடவுள்தான், மண்ணக கடவுள்தான். அதில் எந்தவித சந்தேகமும் இருக்கக் கூடாது என்று சொல்கிறார். இக்கருத்தை யாரும் மறுப்பதில்லை. ஏனெனில் இது நம்பிக்கையின் கோட்பாடு என்று கூறுகிறார். இந்த நம்பிக்கையின் மறைபொருளை மேலும் ஒருபடி அழகுபடுத்தும் விதமாக ஆண்டவர் இயேசுகிறிஸ்து அன்னை மரியாவிடம் இருந்து பிறந்ததால் அன்னை மரியாவின் உதிரம் வழியாக உலகுக்கு வந்ததால் மண்ணகத்தின் கடவுள் எனவும் தந்தையிடம் இருந்து வந்ததால் விண்ணகத்தின் கடவுள் எனவும் சொல்லி அழகு சேர்க்கிறார். எனவே அன்னை மரியாவிடம் இருந்து உருவாக்கியவரும் அவரே (The Creator of Mary, Created from Mary)

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
தஞ்சாவூர்

19



சென்ற மாத இதழில் கானாவூர் திருமணத்தில் பங்கேற்கும் அன்னை மரியாவை புனித அகஸ்டின் கல்வாரியில் நிற்கும் அன்னை மரியாவாக இணைத்து பார்த்தார் என்று சிந்தித்தோம். அதைப்பற்றி நான் என்ன செய்ய முடியும்? என்ற இயேசுவின் வார்த்தையை மையமாக வைத்து சிந்தித்தோம். இந்த மாத கட்டுரையில் இறைமகன் இயேசு அன்னை மரியாவிடம் பேசிய எனது நேரம் இன்னும் வரவில்லையே என்ற இறைவார்த்தையின் அடிப்படையில் சிந்திப்போம்.

**அன்னை மரியாவின் அன்பு**

கானாவூர் திருமணத்தில் பங்கேற்க அழைப்பு பெற்றிருந்தினர் என்ற இறைவார்த்தையை புனித அகஸ்டின் இயேசு கிறிஸ்து தமது முதல் அற்புதத்தை அதாவது முதல் அரும் அடையாளத்தை நிகழ்த்த அழைப்பு மக்களுக்கு கிடைத்த பெரிய அழைப்பாக பெருமைபடுத்துகிறார். இயேசுவின் முதல் புதுமையை பார்க்க அந்த திருமணத்தில் பங்கேற்ற அனைவருக்கும் ஓர் மிக உயர்ந்த உன்னதமான அழைப்பு என்று மிகைபடுத்தி விவரிக்கிறார். எல்லோரையும்விட அன்னை மரியாவுக்கு இது மிகப் பெரிய மகிழ்ச்சியான தருணம். தனது மகனின் புதுமையை நேரில் பார்த்த அன்னை மரியாவின் இதயம் உண்மையாகவே ஆனந்த கண்ணீரில் நிறைந்திருக்கும் என்று கற்பனை திறனை இணைத்து கூறுகிறார்.

**எனது நேரம் இன்னும் வரவில்லையே**

கானாவூர் திருமணத்தில் பங்கேற்று அன்னை மரியாள் கிறிஸ்துவின் மிகச் சிறந்த சீடத்தி ஆகிறார். தனது மகனிடம் திராட்சை இரசம் தீர்ந்து விட்டது எனச் சொல்லி தனது மகனிடம் திருமண வீட்டாரின் கவலையைப் போக்கி வழிசெய்கிறார். இதெல்லாம் நாம் வெளிப்படையாக காண்கிற செய்தியாகும்.

**இதில் மறைந்திருக்கும் தெய்வீக மறைபொருள்**

திராட்சை இரசம் தீர்ந்து விட்டது என்ற அன்னை மரியாவின் வார்த்தைக்கு ஆண்டவர் இயேசு எனது நேரம் இன்னும் வரவில்லையே என்று பதில் கூறுகிறார். அரும் அடையாளம் செய்ய உதவி கேட்டும் தம் அன்னையிடம் எனது நேரம் இன்னும் வரவில்லையே என்று இயேசு பதில் கூறுகிறார். இந்த இரண்டு வாக்கியங்களுக்கு உள்ள தொடர்பு மிக அழகானது. எனது நேரம் வரவில்லையே என்ற இயேசுவின் பதில் வாக்கியம் இயேசு நிகழ்த்தபோகிற முதல் அரும் அடையாளத்துக்கு தொடர்புடைய பதில் அல்ல. மாறாக இது கிறிஸ்துவின் தெய்வீக இறைச்சாயலுக்கு அவரது மனிதச் சாயலுக்கும் தொடர்புடைய வாக்கியம் ஆகும். புனித அகஸ்டின் எனது நேரம் வரவில்லையே என்ற இயேசுவின் பதிலை கானாவூரிலிருந்து எடுத்துச் சென்று கல்வாரியில் சென்று பொருத்துகிறார். யோவான் 2:4-ல் காணப்படும் எனது நேரம் என்ற இறைவார்த்தையை யோவான் 19:26-ல் காணப்படும் இறைவார்த்தையோடு பொருத்துகிறார். சாதாரண தண்ணீர் திராட்சை இரசமாக மாறும் இந்த அரும் அடையாளத்தில் கிறிஸ்துவின் தெய்வீக இறைச்சாயல் நிறைந்திருக்கிறது.

**இயேசு தம் தாயை அறிந்து கொள்கிறார்**

திராட்சை இரசம் தீர்ந்து விட்டது என்ற அன்னை மரியாவின் உதவிகேட்கும் வாக்கியத்திற்கும் எனது நேரம் இன்னும் வரவில்லையே என்ற இயேசுவின் பதிலுக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பது போன்று நமக்கு தோன்றலாம். ஆனால் புனித அகஸ்டின் தொடர்புபடுத்துகிறார். அன்னை மரியா உதவி கேட்பது கிறிஸ்துவின் தெய்வீக இறைத்தன்மையோடு தொடர்புடையது. இயேசு தருகின்ற பதில் அவருடைய





அது. படித்தவர்கள், படிக்காதவர்கள் அனைவருக்கும் இது உரியது என்று மிக அழகாக விளக்கம் தருகிறார்.

ஆரிஜென் என்ற புகழ்பெற்ற இறையியலார் கூறுவார்: மரியா மெழுகினால் ஆன ஒரு பலகை. இறைவன் தான் விரும்புவதை அங்கு எழுதுகிறார். மரியா, ஒரு ஆச்சரியமான புதிய புத்தகம் என்று புனித எப்பிபானியுஸ் கூறுகிறார். பைசான்டைன் திருஅவையின் வழிபாட்டில் மரியா ஒரு புத்தகம். அதில் இறைவன் தனது வார்த்தையை எழுதினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடவுள் எழுதிய இக்கடிதம் நமக்குக் கூறுவது என்ன? மரியாவைப் பின்பற்றி நாம் புனிதத்துவத்தை அடைய இக்கடிதம் நம்மை அழைக்கின்றது. மரியாவைப் பற்றிய வெறும் கருத்துக்களை உள்ளடக்கியது அல்ல இக்கடிதம். மாறாக பவுலடியாரைப் போன்று மரியா நம்மிடம் கூறுவது: ‘நான் கிறிஸ்துவைப் போல் நடப்பது போன்று நீங்களும் என்னைப்போல் நடங்கள்’’. மரியா எனும் மடலை அடிக்கடி வாசித்து தியானிக்கும் போது இந்த உண்மைகள் தெளிவாகிறது. இறைவன் தனது விரலால் வடிவமைத்த மரியா எனும் படைப்பினைப் போன்று நாமும் நம்மை மாற்றிக்கொள்ள, அருள்நிறை அடையாளங்களாக, உருவங்களாக வாழ நாமும் அழைக்கப்படுகிறோம்.

**கிறிஸ்தவ மறை உண்மைகளில் மரியாவின் பிரசன்னம்**

புதிய ஏற்பாட்டில் மரியாவைப் பற்றிய செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன என்று கூற முடியாது. ஆனால் மிக முக்கிய மறை உண்மைகளான இயேசுவின் மனித அவதாரம், உயிர்ப்பு, பெந்தக்கோஸ்து ஆகிய நிகழ்வுகளில் மரியா பிரசன்னமாக இருக்கிறார். இறைவனே மனிதனாக அவரிடத்தில் கருவாகி உருவாகி வளர்ந்தார். திருத்தந்தையர்கள் மிக அழகாகக் கூறுகிறார்கள்: ‘அவருடைய திருஉதரம் நெசவு ஆலை போன்று இருந்தது. அங்கு தூய ஆவியார் இறை வார்த்தையை மனித உருவமாக நெய்தார். இவ்வாறு கடவுள் மானுடத்தோடு ஐக்கியமாகி தன்னைப் பிணைத்துக் கொண்ட அந்த நிகழ்வில் மரியா பிரசன்னமாக இருந்தார். நமக்காக மரித்து பாவத்தின் மீது வெற்றி கொண்டு உயிர்த்து இவ்வுலகை மீட்ட உயிர்ப்பினால் நாம் புதுவாழ்வைப் பெற்றோம். ‘சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும் மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர்’’ (யோவான் 19:2-5) என்று வாசிக்கின்றோம். இயேசுவின் பாடுகள், மரணம் ஆகியவற்றில் முழுமையாகப் பங்கேற்ற மரியா திருஅவையின் தாயாக நிற்கின்றார். ஒவ்வொரு நாளும் இந்த மீட்பின் ஆற்றல் திருஅவையில் வெளிப்பட தூய ஆவியார் தனது அர்ச்சிக்கும் பணியைத் தொடர்ந்தாற்றுகின்றார். இந்நிகழ்வுகளில் மரியாவின் ஈடுபாடு போற்றுதற்குரியது. தூய ஆவியாரின் வருகையின் போது மரியா முழுவதுமாக பிரசன்னமாக இருந்தார். இதைத் திருத்தூதர் பணிகள் நூலில் தெரிய வருகிறோம். ‘அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்’’ (1:14). மரியாவின் உடனிருப்பு, பங்கேற்பு அனைத்தும் நம்மை கிறிஸ்துவை நெருங்கிப் பின்செல்ல அவரது மறை உண்மைகளை வாழ அழைப்பு விடுக்கின்றது.

**திருஅவையின் அன்னையும் உருவமும்**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருஅவை என்ற ஏடு மரியா திருஅவையின் தாயாகவும் அதன் உருவமாகவும் இருப்பதை எடுத்துரைக்கிறது. கிறிஸ்துவின் தாயான மரியா, திருஅவையின் அன்னையாகவும் இருக்கிறார். அது மட்டுமல்ல, மரியா இறைவார்த்தையில் ஒரு அத்தியாயமாக இருக்கிறார். இந்த அத்தியாயம் வெறும் வார்த்தைகளால் ஆனது மட்டுமல்ல. மாறாக இறைவாக்கினர்களைப் போன்று வார்த்தையும் செயல்பாடும் இணைந்ததாக இருந்தது. அவர் சிலுவை அடியில் நிற்பதும் இதையே எண்பிக்கிறது. மேலும் மரியா திருஅவையின் ஒற்றுமைக்கும், ஒப்புரவுக்கும், ஊற்றாகவும் அடையாளமாகவும் இருக்கின்றார். மரியா வழியாக இறைவன் திருஅவையோடு பேசுகின்றார். அவர் இறைவார்த்தையை கருத்தாங்கியவர். மரியா வழியாக ஒவ்வொருவரிடமும் இறைவன் பேசுகிறார். திருஅவையிடம் பேசுகிறார். இந்த நம்பிக்கையுடன் நமது புனிதப் பயணத்தைத் தொடங்க வேண்டும். மரியா இறைவார்த்தையாலும் கருவுற்றிருந்தார். அவர் நமது அருகில் உணரக்கூடியவராய், வழிநடத்துபவராய் இருக்கிறார். நாம் இணைச்சட்ட நூலில் வாசிப்பது போல இறைவார்த்தை உன்னிடமிருந்து வெகு தொலைவில் இல்லை. நீ அதை நிறைவேற்றுமாறு உனக்கு மிக அருகில் உள்ளது. உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது (30:11-14). இதை நாம் நமது அன்னை மரியாவுக்கு உருவகமாகக் கூறலாம். மரியா மீட்புத் திட்டத்தில் பங்கேற்றது நமது அன்றாட நிகழ்வுகளின், பயணச் சூழலின் அடிப்படையில் புரிந்து கொள்ள மிகுந்த பயன் அளிக்கும்.

திருத்தந்தையர் மரியாவை திருஅவையின் உருவமாகப் பாவித்தனர். இந்தக் கருத்தையே இரண்டாம் வத்திக்கான் சங்கம் மிகவும் பயனுள்ளதாகக் கருதியது. திருஅவை இங்கு வலியுறுத்துவது என்னவெனில் நாம் பின்பற்றக்கூடிய மரியா ஒரு நிறைவான முன்மாதிரிகையாக இருக்கிறார். இதை பிரிவினை சபையினரும் அறிந்திருக்கின்றனர். 'மரியா இந்நிகழ்வுகளை எல்லாம் தன் இதயத்தில் வைத்து சிந்தித்து வந்தார்'' என்பதைப் பற்றிய ஒரு விளக்கம் 1522 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா நேரத்தில் மாட்டின் லூத்தரால் எழுதப்பட்டிருக்கிறது. மரியா ஒரு கிறிஸ்தவ திருஅவை. இந்தத் திருஅவை இறைவனின் எல்லா வார்த்தைகளையும் தன் இதயத்தில் வைத்து அவற்றை விவிலியத்தோடு இணைக்கின்றது. இதயத்தில் வைத்து தியானிப்பதை லூத்தர் திருஅவையின் உருவமாகப் பார்க்கின்றார். எனவே பலவகையான பிரிந்து கிடக்கும் திருஅவைகளின் ஒற்றுமையின் அடையாளமாகவும் அன்னை மரியா விளங்குகின்றார். மரியாவைப் போன்று இறைவார்த்தையின் ஒளியில் அவரைப் பார்ப்போம். இதையே தொடக்கக் காலக் கிறிஸ்தவர்கள் தம் வாழ்வில் கடைப்பிடித்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழப்பட்ட கூட்டியக்கத் திருஅவையின் மூன்று பரிமாணங்களான ஒன்றிப்பு, பங்பேற்பு, அறிவிப்பு ஆகியவற்றை ஒவ்வொரு நாளும் வாழ்வோம். மறைந்த திருத்தந்தை பிரான்சிஸின் விருப்பம் மரியாவின் விருப்பம். நாமும் திருஅவையின் தாய்க்குரிய முகத்தைப் புதுப்பிப்போம்.

**திருஅவையின் கண்ணாடி மரியா**

மரியா திருஅவையின் கண்ணாடியாகவும் இருக்கிறார். தான் பெற்ற ஒளியைப் பிரதிபலிக்கிறார். மணமகனைச் சந்திப்பதற்கு தயாரிக்கும் வகையில் திருஅவையும் மரியன்னையில் தன்னை அழகாகப் பிரதிபலிக்கிறது. கடவுளின் வார்த்தையே இங்கு கண்ணாடியாகிறது. அன்னையின் மீது கொண்டுள்ள பக்தி அவரைப் பின்பற்றுவதற்கு நம்மை அழைத்துச் செல்ல வேண்டும். அவரது வாழ்வைப் பற்றிய சிறிய தியானங்களை நாம் அடிக்கடி செய்து அவரின் முன்மாதிரியான வாழ்வில் ஈடுபட வேண்டும். மரியாவைப் புரிந்து கொள்வது மட்டுமல்ல. இன்றையச் சூழலில் அவர் நம்மிடம் பணிக்கும் காரியங்களை செயல்படுத்த நம்மைக் கையளிக்க வேண்டும். 'அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்பதே அவர் நமக்கு விடுக்கும் அன்பான வேண்டுகோள். இதை நாம் அனைவரும் நிறைவேற்றியிருந்தால் கத்தோலிக்கத் திருஅவை இந்த உலகில் ஒரு இறையாட்சியாக ஒளிர் விட்டுக் கொண்டிருக்கும். இந்த உலகமே அதை உற்று நோக்கும். ஆனால் அன்னையின் விருப்பம் இன்னும் நிறைவேறாமலே இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் நாம் அவரை நமது பக்தி முயற்சிகளுக்குள் சுருக்கிவிடப் பார்க்கிறோம். புனித யாக்கோபின் வார்த்தைகளை இங்கு ஆழமாக சிந்திப்போம். 'இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். ஏனென்றால் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாதோர், கண்ணாடியிலே தம் முகத்தைப் பார்த்துவிட்டுச் சென்று உடனே தாம் எவ்வாறு இருந்தார் என்பதை மறந்து விடும் ஒரு மனிதருக்கு ஒப்பாவார். . . . ஆனால் திருச்சட்டத்திற்கேற்ப செயல்களைச் செய்பவர்கள் தம் செயல்களால் பேறு பெற்றவர் ஆவார்கள் (1:22-25).

**நிறைவுரை**

மரியா என்ற கடிதத்தை நாம் வாசிக்க வேண்டும். கடவுளின் ஆவியாரால் எழுதப்பட்ட கடிதம் அவரின் வாழ்வில் நிகழ்ந்த மூன்று முக்கிய நிகழ்வுகளோடு நம்மை ஒன்றிணைக்கிறது. மரியாவும் திருஅவைக்காக இறைவார்த்தையைப் படைத்தார். அதன் பகுதியாகவே இருக்கிறார். திருவெளிப்பாடு நூலில் அடையாளமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் அரியணையில் வீற்றிருந்தவரது வலக்கையில் காணப்பட்ட சுருளேட்டில் உள்ளும் புறமும் எழுதியிருந்தது. அதில் ஒரு முத்திரை பொறிக்கப் பெற்று மூடப்பட்டிருந்தது. செம்மறியானவர் மட்டுமே அதைப் பிரிக்க முடியும் (5:1). அதன் அர்த்தத்தை அவருக்குப் பிரியமானவர்களுக்கு வெளிப்படுத்த முடியும். மரியா எனும் இறைவார்த்தையை நம்பிக்கையுடனும் செப மனநிலையுடனும் வாசிப்போம். கடவுள் நாம் புரிந்து கொள்ளும் அளவிற்கு விளக்கம் தருவார். இறைவனின் அன்னையாகிய மரியா வழியாக திருஅவைக்கு இறைவன் கூறுவதும் இதுவே. கடவுளின் விரலால் எழுதப்பட்ட மரியா எனும் கடிதத்தில் இத்தகைய மேன்மையான புரிதல்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவரது கடிதத்தை நாம் வாழ்வாக்கும் போது நமது கடிதங்களும் உயிர்பெறுகின்றன. இறைவார்த்தையைக் கடைபிடிப்போர் தனது தாயை விட மேலானவர்கள் என்ற இயேசுவின் வார்த்தைகளை உண்மையாக்குவோம். நமது கடிதங்களும் இறைவனின் அன்பு விரல்களால் எழுதப்பட மரியா எனும் கடிதம் தூண்டுவதாக!





ஒவ்வொருவருக்காகவும் இறைவனிடம் மன்றாடுங்கள்!' என்று கூறிய வார்த்தைகளை நினைவில் கொண்டு வருகிறார். அதிலிருந்து தன்னுடைய மனக்குமுறலை செபமாக மாற்றி எல்லோருக்காவும் தந்தையிடம் இறைவேண்டல் செய்கிறார்கள்.

**பொதுநிலையினர் பார்வையில் அன்னையின் ஏழாம் வியாகுலம்:**

அன்னை மரியாவின் அனைத்து வியாகுலங்களிலும் கொடிய வியாகுலமாக ஏழாம் வியாகுலம் பார்க்கப்படுவதற்கு காரணம் தன்னோடு இருந்த சேசு, தன்னால் பார்க்க பேச முடிந்த சேசு இப்போது தன்னோடு இல்லை. இதுவே அன்னை மரியாவுக்கு தாங்க முடியாததாகவும், மிகவும் கொடியதாகவும் இருந்தது. கத்தோலிக்க கிறிஸ்தவர்களே! இங்கு நாம் சிந்திக்க வேண்டியது என்னவென்றால், எப்போது நாம் சாவான பாவங்களை செய்கின்றோமோ அப்போதே நம் இருதயங்களில் சேசுவை மரணமடையச் செய்து அடக்கம் செய்துவிடுகிறோம். தூய ஆவியானவர் நம்மிடமிருந்து விலகிவிடுகிறார். இப்போது நம்முடைய நிலை என்ன? இதே நிலையில் நாம் தொடர்ந்து நீடிப்போமென்றால் நாம் இறைவனை நம்முள் கொண்டிராமல் அனேக காரியங்களை செய்வோம். ஆனால் அனைத்தும் பலன் தராததாகவே அமையும். ஆனால் நம்மில் அனேகர் சாவான பாவங்களை செய்து விட்டு எவ்வித மன உறுத்தலுமின்றி ஒன்றும் நடவாதது போல் வாழ்ந்து வருகின்றோம். ஏனென்றால் பாவத்தில் தவறி விழுந்த பிற்பாடு மீண்டும் இறைவனோடு ஒப்புரவாகிட பாவங்களுக்காக மிகுந்த மனத்துயர் கொண்டு நல்ல ஒப்புரவு அருட்சாதனம் செய்வதே! ஆனால் நாம் நல்ல ஒப்புரவு அருட்சாதனம் பெற்று இழந்துபோன இறையருளை மீண்டும் நம்மை பெறவிடாமல் சாத்தான் பல்வேறு நல்ல வழிகளை நமக்கு காட்டுவதால் நாம் மனத்துயர் கொள்ளாமலும், நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யாமலும் இருந்து விடுகிறோம். இது மிக மிக ஆபத்தானது. ஏனவே நம்முடைய ஆத்துமத்துக்கு அழிவு வருமுன்பே விழித்துக்கொள்வோம். நாம் விழித்துக்கொள்ளாவிட்டால் கடவுள் முன்னிலையில் நிற்கும் நாள் வரும்போது நமக்கு வழங்கப்பட்ட மனந்திரும்புதலுக்கான நல்வாய்ப்பை அலட்சியம் செய்ததற்காக கண்டிப்பான கணக்கு கொடுக்க வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.

**நிறைவாக:**

தொடர்ந்து ஏழு மாதங்கள் அன்னையின் வியாகுலங்களை சிந்தித்து அன்னை மரியாவை அன்பு செய்து அதன் வழியாக சேசுவை அன்பு செய்ய முயன்றிருக்கிறோம். சேசுவின் பாடுகளையும் அன்னை மரியாவின் வியாகுலங்களையும் நாம் நாள்தோறும் சிந்திப்பதால் நம்முடைய ஆன்ம தேவைகளும் நம்முடைய அன்றாட வாழ்விற்கு தேவையானவற்றையும் வியாகுல அன்னை தம் அன்பு மகனிடமிருந்து பெற்றுத் தருவார்கள் என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை. இந்தக் கட்டுரையை படித்தவர்கள் நாள்தோறும் அன்னையின் ஏழு வியாகுலங்களையும் தியானித்து ஏழு அருள் நிறை மந்திரங்களை செபித்து வியாகுலத்தாயை மகிமைபடுத்தி ஏராளமான அருள்வரங்களை பெற்றுக்கொள்வோம். மற்றவர்களும் இத்தகைய அருளையும் ஆசீரையும் பெற்றுக்கொள்ள நம்மால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் செய்து வியாகுலத் தாயை மகிமைப்படுத்துவோம்.

மரியாயின் துயரம் நிறைந்த மாசற்ற இருதயமே உம்மிடம் தஞ்சமென்று ஓடிவரும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். ஆமென்.

சேசுவுக்கே புகழ்! வியாகுல மரியே வாழ்க!



## பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 7

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

அன்னை மரியாவின் ஆறாம் வியாகுலத்தை, சேசுவின் திருவுடல் சிலுவையினின்று இறக்கப்பட்டு தாயின் மடியில் கிடத்தப்படுகிறது. தன் மடியில் கிடத்தப்பட்ட தன் நேச மகன் சேசுவின் உடலில் உள்ள ஆழமான காயங்களை பார்த்து எத்தகைய கொடிய வியாகுலங்களை அனுபவித்தார் என்பதை ஆழமாக சிந்தித்த நாம், சேசுவின் திருவுடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது. அன்னை மரியாள் தனித்து விடப்படுகிறார். சேசு தன்னோடு இல்லாமல் இருப்பதை தன்னால் தாங்கக் கூடாதவராக இருக்கின்றார் அன்னை மரியாள். அன்னையின் மற்றெல்லா வியாகுலங்களையும் விட ஏழாம் வியாகுலம் மிகவும் கொடியதாக உள்ளது. அன்னையின் இந்த மாபெரும் துயரத்தை சற்றே தியானிக்க நாம் முயற்சி செய்வோம்.

**அன்னை மரியாவால் தாங்க முடியாத ஏழாம் வியாகுலம்:**

சேசுவின் திருவுடலை கல்லறையில் அடக்கம் செய்த பிற்பாடு, அன்னை மரியாள் தன்னுடன் இருந்தவர்களோடு ஆண்டவரின் இறுதி உணவு, பாஸ்கா விருந்து நிகழ்ந்த அந்த இல்லத்தில் சென்று தங்குகிறார்கள். யோவான் அன்னை மரியாவிடம் சிறிது இளைப்பாறும்படி கேட்டுக் கொள்கிறார். ஆனால் அன்னை மரியாவோ, எனது அன்பு மகன் உயிர்த்தெழுவதைக் காண்பதுதான் எனது இளைப்பாறுதல் என்று கூறுகிறார். அன்னை மிகுந்த வியாகுலங்களால் நிறைந்திருப்பதால் அங்கிருப்பவர்கள் அன்னையிடம் பேச்சுக் கொடுத்து அவர்களை ஆறுதல் படுத்த வார்த்தைகள் இல்லாததால் அன்னையை தனியே விட்டுவிடுகிறார்கள். அன்னை தனி அறையில் இருந்து கொண்டு துயர மிகுதியால் அழுதுகொண்டும் புலம்பிக் கொண்டும் இருக்கிறார்கள். சேசு அவர்களோடு இல்லை என்பதையும் அவர் உயிர்த்தெழுவது வரையும் தான் தனிமையில் இருக்கிறேன் என்ற நினைவுமே அன்னை மரியாவுக்கு மற்றெல்லா வியாகுலங்களையும் விட கொடிய வியாகுலமாய் இருக்கிறது.

**அன்னை மரியாளின் மனக் குமுறல்:**

**சேசு என்ன** குற்றம் செய்தார் இந்தப் பாடுகள் அனுபவிக்க? ஆளுநன் பிலாத்துவும், ஏரோதுவும் கூட அவரிடம் குற்றம் ஏதும் காணவில்லையே? மாசற்ற, எந்தவிதமான அப்பழுக்கும் இல்லாத எனது அன்பு மகனை இவ்வாறு கள்வர்கள் நடுவே சிலுவையில் அறைந்து கொன்றுவிட்டார்களே! உண்மை நெறியை போதித்தவருக்கு, மனித நேயத்தை மக்களுக்கு கற்பித்தவருக்கு, வாழ்வில் ஒதுக்கப்பட்டோருக்கும், கைவிடப்பட்டவருக்கும் உரிமை வாழ்வு வழங்கியவருக்கு இவ்வாறு செய்துவிட்டார்களே! இவர்களை என்ன செய்வது? என்று அன்னை மரியா மனக்குமுறலின் உச்சத்தில் இருக்கும்போது, சேசு தன்னிடம் 'அம்மா! இந்த வேளையில் இருந்து நம்மைத் துன்புறுத்தும்





# அன்னையின் 77 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## கோவதோங்கா அன்னை (Our Lady of Covadonga) ஸ்பெயின்

ஐரோப்பாவில் பரவ தொடங்கிய கிறிஸ்தவம் பல்வேறு விதமான சவால்களை தொடர்ந்து சந்தித்து கொண்டே இருந்தது. திருஅவைக்குள் கிளம்பிய கருத்தியல் ரீதியான குழப்பங்களும் சண்டைகளுக்கும், பிரிவினைகளுக்கு வித்திட்டின. அதே தருணத்தில் ஆசியாவில் தோன்றி மற்றொரு மதமான இஸ்லாத்தை சார்ந்த மன்னர்களின் பார்வையும் ஐரோப்பாவை நோக்கித் திரும்பின.

கி.பி. 711ஆம் ஆண்டு அரபிய இஸ்லாமியர்களும், வட ஆப்ரிக்காவை சார்ந்த பெர்பெர் இனத்தின வழித்தோன்றல்களான மூர்ஸ் இனத்தவரும் இபேரியன் தீபகற்பத்தை தாக்கினர். மிகக் கடுமையான தொடர் தாக்குதல்களின் வாயிலாக அவர்கள் இஸ்பானியாவை சார்ந்த விஸிகோத்திக் கிறிஸ்தவர்களை வெற்றிக் கொண்டனர். எட்டு ஆண்டுகள் கடும் போருக்குப் பின் இஸ்லாமியர்களின் படைத்தலைவர் தாரிக் இபின் ஜியாத், இபேரிய பகுதி முழுவதையும் இஸ்லாத்தின் ஆளுகைக்குள் கொண்டு வந்தார்.

இப்போரில் விஸிகோதிக் அரசன் ருடோல்போ தெற்கு ஸ்பெயினில் அந்துலேசியன் பகுதியில் இருந்த கவுதலாதே என்ற போர் களத்தில் வீரமரணமடைந்தார். போரில் தோல்வியடைந்து தளர்ச்சியுற்றிருந்த போர்வீரர்களையும், அவர்களின் படைத்தளபதிகளையும் ஒன்றிணைத்த பேலாயோ என்கிற தளபதி, அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக அஸ்துரியாஸ் என்கிற பகுதியில் ஒன்று திரட்டினார். ஸ்பெயின் தேசத்தின் பல்வேறு பகுதிகளையும், இனங்களையும் சார்ந்தவர்களாக இருந்தாலும், கிறிஸ்தவர்கள் என்கிற ஒற்றை அடையாளம் அவர்களை எளிதாக ஒன்று சேர்ந்தது. கிறிஸ்தவத்தைக் காக்கவும், ஸ்பெயினின் கலாச்சார, பண்பாட்டை பாதுகாக்கவும் உறுதிபூண்ட அவர்கள், பெலாயோவின்



தலைமையில் ஒன்று கூடி மூர் இனத்தவருக்கு எதிராக போரிடுவது என்று முடிவெடுத்தனர்.

ஸ்பெயின் வெற்றிக் கொண்டுவிட்டதாக கருதிய அராபியர்கள், தங்களின் அடுத்த இலக்காக □ால் பகுதியில் இருந்த பிரான்சு தேசத்தை குறிவைத்து தங்கள் திட்டங்களை தீட்டினர். அவ்வமயம், ஸ்பெயினின் அஸ்துரியா பகுதியிலிருந்து எழும்பிய எதிப்பும், போருக்கான குரல்களும் அராபியர்களை திகைக்கச் செய்தது. அவர்கள் தங்கள் மனதில் ஸ்பெயினை ஒரு செத்த பாம்பென கருதினர். ஆனால், போர் மேகங்கள் தங்களை சுற்றி சூழ்ந்து வருவதை கண்ட அராபியர்கள், நிலைமை கைவிட்டு போவதை உணர்ந்தனர். அவசரமாக தங்கள் கவனத்தை ஸ்பெயின் நோக்கி அதிலும் குறிப்பாக அஸ்துரியாவை நோக்கி திருப்பினர்.

கி.பி. 722ஆம் ஆண்டு படைத்தளபதி அல்கமார் தலைமையில் நன்கு பயிற்சி பெற்ற ஒரு படையை அஸ்துரியாவிற்கு அனுப்பினர். அவர்களின் நோக்கமெல்லாம் பெலாயோவை கொன்று, விஸிகோத் படையை நிர்மூலமாக்க வேண்டும் என்பதாகவே அமைந்திருந்தது. பெரும் படையாக திரண்டுவரும் முஸ்லிம் படைகளை அல்சேபா மலைப் பகுதியில் எதிர்கொள்ள அனைத்து ஏற்பாடுகளையும் பெலாயோ செய்தார். அல்சேபா மலைத் தொடரில் இருந்த குன்றுகள், எண்ணிக்கையில் குறைவாக இருந்த கிறிஸ்தவ போர்வீரர்களுக்கு மிகப் பெரிய பாதுகாப்பாக இருந்தது. பெலாயோ தன் படைவீரர்களை குன்றுகளில் மறைந்திருந்து எதிரியின் வருகைக்காக காத்திருக்க செய்துவிட்டு, அவர் மட்டும் அருகிலிருந்த குகைக்கு சென்று, அங்கு அன்னை திருஉருவத்தை வைத்து, அன்னையின் சிறப்பான







தயையுள்ள அன்னையிடம் நம்பிக்கை கொண்டு அவரைத் தேடிவரும் குறையுள்ள பக்தர்கள் நிறைவுள்ளவர்களாக மாறுவார்கள். துன்பம் நிறைந்தவர்கள் இன்பம் பெறுவார்கள். வெறுப்போடு வாழும் மனிதர்கள் அன்பான இதயம் பெறுவார்கள். பாவத்தால் வாடுபவர்கள், இறைவனின் மன்னிப்பை அன்னை வழியாக பெற்றுச் செல்வார்கள். மனிதர்களின் கொடிய செயல்களாலும் பாவம் நிறைந்த இவ்வுலகம் இன்னும் இயங்குகிறது என்றால் அது அன்னை மரியாவின் தயை மிகுந்த அன்பால் மட்டுமே என்பது திண்ணமாகும்.

தயையுள்ள அன்னையிடம் நம்பிக்கை கொண்டு அவரைத் தேடிவரும் குறையுள்ள பக்தர்கள் நிறைவுள்ளவர்களாக மாறுவார்கள். துன்பம் நிறைந்தவர்கள் அவை நீங்கப் பெற்று இன்பம் பெற்றுச் செல்வார்கள். வெறுப்போடு வாழும் மனிதர்கள் அன்புள்ள இதயம் கொண்டு செல்வார்கள். பாவத்தால் வாடுபவர்கள் இறைவனின் மன்னிப்பை அன்னை வழியாகப் பெற்று செல்வார்கள். மனிதர்களின் கொடிய செயல்களாலும் பாவம் நிறைந்த இவ்வுலகம் இன்னும் இயங்குகிறது என்றால் அது அன்னை மரியாவின் தயை மிகுந்த அன்பால் மட்டுமே என்பது திண்ணமாகும்.

மரியின் தயை நிறைந்த வேண்டுதலால் இறைவன் அவர் கேட்கும் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றி வருகிறார். நோய் நொடிகள், பிரச்சனைகள், கைவிடப்பட்ட நிலை, சோதனை வேளை என்று இக்கட்டான நிலையில் அனைவருக்கும் அன்னை மரியா வழிகாட்டும் விண்மீனாகவும, இரக்கம் காட்டும் அன்னையாகவும் செயல்படுகிறார். கானாவூர் திருமணத்தின்போது மனித தேவையை உணர்ந்த அவர், இன்று விண்ணகத்தில் இறைவனோடு இருக்கும் அவர் நமது தேவையைப் பாராமல் அறியாமல் போவாரோ ஒருபோதும் இல்லை. கடல் அலை ஓயலாம். ஆனால் மரியின் தயை நிறைந்த குணம் என்றென்றைக்கும் நிலைக்கும் மலைபோல் இருக்கும். நமது வேதனை பனிபொல் கரைந்துவிடும். அன்னையிடம் கண்ணீரோடு வருபவர்கள் அவரின் தயவால் ஆனந்தம் பெற்றுத்தான் செல்வார்கள்.

மனிதரின் தேவையைப் புரிந்து அறிந்து, உணர்ந்து அதை நிறைவேற்றத் துடிக்கும் ஓரே தாய், முதல் அன்னை, அவரே தயை நிறைந்த அன்னை மரியா. கானாவூர் திருமணத்தின்போது திராட்சை இரசம் தீர்ந்துபோனது. இதனால் வீட்டின் உரிமையாளர் கவலையுடன் என்ன செய்வதென்று குழப்பத்தில் இருந்தார், பந்தியில் அமர்ந்திருக்கும் ஒருசிலர் ஏளன பேச்சு பேசுவதிலும், திட்டி தீர்ப்பதிலும் குறியாய் இருந்தனர். இந்த அவலநிலை மாறி இழிநிலை மறைந்து ஒரு புதிய நிலை உருவாக வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டு அவர்கள்மீது தயைகூர்ந்து தன் மகனிடம் மரியா பரிந்து பேசுகிறார். இயேசு கிறிஸ்துவின் தந்தையாம் கடவுளிடம் வேண்டி தண்ணீரை திராட்சை இரசமாய் மாற்றி ஒரு அற்புத நிகழ்வை நடத்துகிறார். இவ்வாறு இயேசுவின் புதுமைக்கும், மணவீட்டாரின் இழிநிலை மாறி அனைவரும் உபசரிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்தது அன்னை மரியா.

தயவு நிறைந்த அன்னை மரியாவே மனிதரின் தேவையை நிறைவேற்றி, கண்ணீரையும் கவலையையும் போக்கி ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையும் அவர்களுக்குப் பரிசாக கொடுத்தவர் அதுமட்டுமல்லாமல் வயது முதிர்ந்த எலிசபெத்துக்கு பணிவிடை புரிந்து தயவு காட்டியவர் மரியா. இவ்வாறு ஆயனில்லா ஆடுகள் போல அலையும் மாந்தர்கள்மீது கிறிஸ்து பரிவு கொண்டு இரக்கம் காட்டியதுபோல ஆதரவும் ஆறுதலும் அடைக்கலம் இல்லாத ஏழை எளிய மக்கள் அனைவர் மீதும் தயவும் பரிவும் காட்டி அவர்களுக்கு புதுமையான வாழ்வை அன்னை மரியா அளித்து வருகிறார்.

அன்னை மரியாவின் உள்ளார்ந்த தெய்வீகப் பார்வையும் மனதின் தூய எண்ணமும் வெளிவேடமற்ற தியாக அன்பின் செயல்பாடுகளும் அவர் தயைமிகுந்த தாய் என்பதற்கான சான்றாகும். அவர் கடவுளின் பேரொளியைத் தன் உள்ளத்தில் நினைத்துப் போற்றி துதித்து வந்தார். இதனால் இவ்வுலக மாந்தர் அனைவரையும் தன் பாரத்தில் தாங்கி இருளில் நடப்பவர்களை ஒளியில் காத்துக் கொண்டு வருகிறார்.

அன்னை மரியா வாயில் உதிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் தயவு நிறைந்ததாக இரக்கம் மிகுந்ததாக வெளிப்பட்டது. மரியாவுக்கும் கபிரியேல் தூதருக்கும் நடந்த உரையாடலின்போதும் கானாவூர் நிகழ்வின் போதும் மற்றும் அவரது வாழ்வின் அனைத்து நேரமும் அவரது வார்த்தை கனிவும் இனிமையும் நிறைந்ததாக இருந்தது. அவரின் வார்த்தையெல்லாம் மலர்போன்று மென்மையாகவும் தாயைப்போன்று தேற்றுபவராகவும், இறைஅன்பு போன்று இரக்கம், தயவு, கருணை நிறைந்ததாகவும் இருந்தது. இவ்வார்த்தையானது அவரது உன்னதமான உயர் உள்ளத்திலிருந்து வற்றாத ஜீவ நதியாக பெருக்கெடுத்து ஓடியது.





உடனிருப்பிற்காக செபித்து விட்டு வந்தார்.



மூர்களுக்கும், விஸிகோத்தியர்களுக்கும் இடையில் போர் தொடங்கியது. முதலில் மூர்கள் குன்றுகளுக்கு பின் இருக்கும் விஸிகோத்திய வீரர்களை நோக்கி அம்புகளை ஏவ ஆரம்பித்தனர். பெருமழை என அம்புகள் பொழிய ஆரம்பித்தன. விஸிகோத்தியர்கள் அக்கணமே அழிந்து போவார்கள் என்றெண்ணிக் கொண்டிருந்த வேளையில், ஒரு அதியம் நிகழ்ந்தது. எய்யப்பட்ட அம்புகள் இலக்கை தாக்காமல் திரும்பி வந்து எய்தவனையே தாக்கியது. மூர்கள் குழம்பி போனவர்களாய், நிலைகுலைந்து போனார்கள். அத்தருணத்தில் விஸிகோத்தியர்களின் ஒரு பிரிவினர் முன்னேறி சென்று மூர்களை தாக்கினர். மற்றொரு பிரிவினர் மூர்கள் மீது அம்புகளை வீசி அவர்களை முழுமையாக நிலைகுலைய செய்தனர். நன்கு பயிற்சி பெற்ற, திறமையான வீரர்களின் இந்நிலையைக் கண்டு அனைவரும் அதிர்ச்சியடைந்து கொண்டிருந்த நேரத்தில் படையின் துணைத் தளபதி சுலைமான் போர்களத்தில் கொல்லப்பட்டார். இச்சூழலை எதிர்பார்க்காத படைத்தளபதி அல்கமார், உடனடியாக படையை பின்வாங்க கட்டளையிட்டார்.

அத்தருணத்தில் பெருங்காற்று அடிக்க, பேரிடி மற்றும் மின்னலுடன் கனத்த மழை பொழிய ஆரம்பித்து. மலைக் குன்றுகளிலிருந்து மழை நீருடன் சகதியும், பாறைகளும் உருண்டோடி வந்து, பின்வாங்கிக் கொண்டிருந்த மூர் வீரர்களை அடித்துச் செல்ல ஆரம்பித்தது. தங்கள் உயிரைக் காப்பாற்றி கொள்ள நூற்றுக் கணக்கான வீரர்கள் தேவா ஆற்றில் குதித்தனர். அந்தோ பரிதாபம், கையில் அம்புகளுடனும், மார்பில் கவசம் அணிந்து பெரும் வெற்றியையும், அகப்பட போகும் கொள்ளை பொருட்களையும் கனவில் கொண்டவர்களாக வந்த அவ்வீரர்கள் ஜல சமாதி அடைந்தது மூர் படையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தங்களால் இனிமேல் ஒன்றும் செய்யமுடியாது என்கிற நிலையில் அவர்கள் புறமுதுகிட்டு ஓடினர்.

விஸிகோத்தியரின் இப்பெரும் வெற்றிக்கு காரணம் அக்குன்றிலிருந்த கோவாதோங்கா அன்னை மரியாள் தான் என்பது



வெள்ளிடை மலை உண்மையாகும். தன்னை நம்பி வந்தோரை அன்னை ஒரு போதும் கைவிடமாட்டார் என்பதோடு, தன் செபங்களை தன் திருமகன் எப்போதும் கேட்பார் என்ற அவரது நம்பிக்கையும் வீண்போகவில்லை.

கோவதோங்கா போரில் வெற்றியடைந்த பெலாயோ, அஸ்துரியன் பகுதியின் அரசராக அறிவிக்கப்பட்டார். அன்னையின் பரிந்துரையின் மகத்துவத்தை உணர்ந்த கத்தோலிக்க அரசன் முதலாம் அல்போன்ஸோ அக்குன்றில் கோவதோகோ அன்னைக்கு ஒரு ஆலயமும், அவ்வாலயத்தை பராமரிக்க ஒரு துறவுமடமும் கட்டப்பட வேண்டும் என்று ஆணைப்பிறப்பித்தார்.

அன்னையின் குகைக்கு அருகில் இருந்த ஆலயமானது கி.பி. 1777ல் ஏற்பட்ட தீவிபத்தில் முழுமையாக எரிந்து சாம்பலானது. உடனடியாக, அதே இடத்தில் ஒரு ஆலயம் கட்ட முடிவெடுக்கப்பட்டு அதற்கு தேவையான பொருளாதார உதவிகளை ஸ்பெயின் முழுவதிலுமிருந்து பெற முடிவெடுக்கப்பட்டது. ஆனால், அங்கிருந்த துறவிகள் அத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும், அவர்கள் புகழ்பெற்ற கட்டடிட கலை நிபுணரான வெந்தூராஸ் ரொட்ரிகுஸ் அவர்களால் வடிவமைக்கப்பட்ட ஆலயத்தை கட்ட வேண்டும் என்று தெரிவித்தனர். ஆனால், அத்திட்டம் நிறைவேறவே இல்லை.

ஒரு நூற்றாண்டு பிறகு, நிறைவேறாமல் இருந்த அன்னையின் ஆலயத்தை கட்டி முடிக்க 12ம் அல்போன்ஸ் என்கிற அரசர் விருப்பம் கொண்டார். வெந்தூராஸின் திட்டத்தை நிறைவேற்ற பெரும் பொருள் வேண்டும் என்பதை உணர்ந்த அவர், புதிய மறுமலர்ச்சி கால கட்டிட பாணியில் கட்ட உத்தரவிட்டு, அம்முயற்சியில் வெற்றியும் பெற்றார். இத்திட்டமானது பல்வேறு சவால்களுக்கிடையில் ரொபர்தோ பிரசில்லினி







# மாதா மன்றாட்டு மாலை

19



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## ***தயையுள்ள கன்னிகையே***

இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர் (மத் 5,7)


கடவுள் விடுத்த அழைப்பிற்கு அன்னை மரியா தயை நிறைந்த உள்ளத்தோடு கனிவு நிறைந்த உள்ளத்தோடும் பதில் மொழி கூறுவதை நாம் அறியலாம். தனது பார்வையை வற்றாத வாழ்வின் ஊற்றாகிய கருணை நிறைந்த கடவுள்மீது வைத்ததால் அவரின் செயல்கள் அனைத்தும் தயவும் இரக்கமும் நிறைந்ததாக உருமாறியது. நமது பார்வையை அழிந்து போகும் உலகச் செல்வம் மீது செலுத்தாமல் அழியாத கிறிஸ்துவின் பாடுகள் மீதும் சிலுவை மீதும் செலுத்தும்போது நமது வாழ்வின் செயல்பாடுகள் தயை நிறைந்ததாக வெளிப்படும்.

வேரின் வலிமை மரத்தில் காய்க்கும் கனியின் சுவையில் தெரியும். எறும்புகளின் உற்சாகமும் ஒற்றுமையும் பிறருக்காக உணவு சேகரிக்கும் பண்பாட்டில் தெரியும். தென்றல் வெளிப்படுத்தும் அருமை இன்பம், நமது உணர்வில் தெரியும். தாய்மையின் மேன்மையும் பெருமையும் பிள்ளையின் வாயில் உதிக்கும் வார்த்தையிலும் வாழ்விலும் தெரியும். அதுபோலவே இயேசுவின் இதயத்தில் மறைந்து இருக்கும் பொறுமை நிறை குணமும், குறைவில்லாத் தவமும் அழிவில்லா அன்பும், தேயாத கருணை உள்ளமும் மாறாத தயவு நிறை பாசமும் அன்னை மரியாவின் வாழ்வில் நிலவும் ஒளி போல் பிரதிபலித்தது. இயேசுவின் இதயத்தில் நமது இதயத்தைத் தைக்கும்போது இயேசுவின் அன்பும் இரக்கமும் நம் வாழ்வில் வெளிப்படும்.

அன்பும், தயவும் நிறைந்தவர் என்பதை ஒவ்வொரு நாளும் அன்னை நம் ஒவ்வொருவருக்கும் வெளிப்படுத்தி வருகிறார். அன்னையின் எளிமையான, அமைதியான வாழ்க்கை அவரின் இரக்கக் குணத்தை வெளிக்காட்டுகிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதபோல அன்னை மரியின் தயை நிறைந்த உள்ளம், அவர் செய்த உதவி மூலம் நமக்குத் தெரியும்.



# அருட்தந்தை கார்லோ அமிராண்தே



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

கார்லோ அமிராண்தே 1852 நவம்பர் 3 அன்று இத்தாலியின் சோவராதோ (Soverato) நகரில் பிறந்தார். அவரது பெற்றோர் சாவேரியோ அமிராண்தே (கடான்சாரோ மாகாணத்தின் நிர்வாக அதிகாரி) மற்றும் ரோசாலியா க்லியாமஸ். அவரின் வளர்ப்பு மிகவும் பாரம்பரியமானதாக இருந்தது. அவர் இராணுவத்தில் சேவை செய்ய விரும்பி, இராணுவப் பள்ளியில் சேர்ந்தார். அவர் இலக்கியம் மற்றும் பொறியியல் துறையில் பட்டம் பெற்று, புகழ்பெற்ற ஆயுதப்படையில் துணை அதிகாரியாக பணியாற்றினார்.

1870ஆம் ஆண்டில், பதினெட்டாவது வயதில், அவர் உரோமையை கைப்பற்றுவதில் பங்கேற்றார் (இத்தாலிய அரசு திருத்தந்தையின் நிலங்களை கைப்பற்றிய முக்கிய சம்பவம்). அந்த போரின்போது, ஒரு வெடிகுண்டின் துணுக்கால் அவரது தொண்டை கீறியதனால் ஆபத்தான காயம் ஏற்பட்டது, ஆனால் அதிர்ஷ்டவசமாக முக்கிய இரத்த நாளம் பாதிக்கப்படவில்லை. அவரை உடனடியாக ஒரு மருத்துவ முகாமுக்கு கொண்டு சென்றனர். அவர் உரோமை மீதான தாக்குதலில் பங்கேற்றதனால் திரு அவையின் விலக்குக்கு உள்ளாகியிருக்கலாம் என்று கவலைப்பட்டார். அதனால், குணமடைந்த பிறகு, அவர் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் அவர்களை சந்தித்து, தன்னை அந்த விலக்கிலிருந்து விடுவிக்கக் கோரினார். ஆனால், திருத்தந்தை அவர் மன்னிப்புக்குரியவர் அல்ல என்றும், அவர் வெறுமனே உத்தரவை நிறைவேற்றியவரே என்றும் கூறினார்.

அவருக்கு கேப்டன் பதவி வழங்கப்பட இருந்தபோது, அவர் தனது இராணுவ வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வந்து, குடும்பத்திடம் திரும்புவதற்காக தீர்மானித்தார். தான் ஒரு குருவாக மாற வேண்டும் என்ற இறை திட்டத்தை உணர்ந்து குருமடத்தில் சேர்ந்து குருவானவர். குரு ஆன இருபது ஆண்டுகளுக்கு பிறகு, அவர் நமது மரியின் ஊழியர் மூன்றாம் சபையில் இணைந்தார். 1897ஆம் ஆண்டிற்கான மரியின் ஊழியர் மூன்றாம் சபையின் பதிவில் அவரின் பெயர் காணப்படுகிறது.

இந்த இருபது ஆண்டுகளில், அவர் இறையருள் பணியில் மிகுந்த உழைப்பு காட்டினார். அவரது பணிநேர்மையும், கிறிஸ்தவ நன்னடத்தை மற்றும் பணிவும் சிறப்பாக வெளிப்பட்டன. அவரது ஆழ்ந்த இரக்க உணர்வும், முடிவிலாகும் பொறுமையும் குறிப்பிடத்தக்கவை. அவர் பத்திரிகையாளராக, ஆசிரியராக, இசை வல்லுநராக, பல்கலைக்கழக மருத்துவமனையின் ஆலோசக ஆன்மிக குருவாக, பங்குத்தந்தையாக, மரண தண்டனை கைதிகளுக்கான ஆன்மிக வழிகாட்டியாக பணியாற்றினார். 1934ஆம் ஆண்டு ஜனவரி 20 அன்று, 82 ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். 1954 டிசம்பர் 20 அன்று, அவரது முத்திப்பேறு பட்டத்துக்காக மறைமாவட்ட அளவிலான செயல்முறை தொடங்கியது. 1980 ஜூலை 19 அன்று, திருஅவையின் புனிதர்கள் உறுதிப்படுத்தும் பிரிவு, அதற்கான ஆய்வுகளை ஒப்புக்கொண்டது. அவர் புனிதராக்கப்படுவதற்கான செயல்முறை தொடர, மேலும் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.







என்பவரால் நிறைவேற்றப்பட்டது.

கி.பி. 1857ஆம் ஆண்டு மோன்தேபென்சியரின் இளவரசர் பிலிப் ஓர்லேந்தேவால் வழங்கப்பட்ட சிலுவையானது நிறுவப்பட்டது. இங்குதான், பெலாயோ அஸ்துரியன் அரசராக முடிசூட்டப்பட்டார்.

கி.பி. 1900 ஆம் ஆண்டில் இங்கு 4000 கிலோ எடையுள்ள மிகப்பெரிய மணி ஒன்று நிறுவப்பட்டது. இம்மணியானது இத்தாலிய சீமாட்டி சிஸ்ஸோ நோரிஸ் என்பவரால் வழங்கபட்டதாகும்.

கி.பி. 1901ல் இவ்வாலயம் முழுமையாக புதுப்பிக்கப்பட்டது. இந்த ஆலயத்தில் 16ஆம் நூற்றாண்டை சார்ந்த பழமையான அன்னையின் திருஉருவம் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. கி.பி. 1964ஆம் ஆண்டு எட்துவார்தோ சரகோசா என்பவரால் வடிவமைக்கப்பட்ட பெலாயோவின் ஆளுயர வெண்கல சிலையானது, அங்குள்ள சதுக்கத்தில் நிறுவப்பட்டது.


புனித இரண்டாம் ஜான் பால் இத்திருத்தலத்திற்கு கி.பி. 1989ஆம் ஆண்டு ஆகஸ்டு 21ஆம் நாள் திருப்பயணம் மேற்கொண்டார். இத்திருத்தலத்தில் நிறைவேற்றிய திருப்பலியின் இறுதியில், எல்லைகளில்லா ஐரோப்பாவிற்கு தன் ஆசிகளை வழங்கினார். அன்னையின் பார்வையில் அனைவரும் ஒரு குலமே என்கிற கருத்தை வலியுறுத்துவதாக இது அமைந்தது.

**திருப்பயணம் தொடரும்...........**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## யோபு 21-42



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21



**வலமிருந்து இடம்**

3) அதனை அடுத்து ………… அவர் குரல்: பேரொலியில் அவர் முழங்கிடுவாரே: மின்னலை நிறுத்தார் அவர்தம் குரல் ஒலிக்கையிலே.

4) அவர்கள் …………மீறியதையும், இறுமாப்புடன் நடந்ததையும் எடுத்து இயம்புவார்.

7) சீர்தூக்கும் கோலில் எனை அவர் நிறுக்கட்டும்: இவ்வாறு கடவுள் என் நேர்மையை……….

8) அன்று …………… என்னோடு இருந்தார்: என் மக்கள் என்னைச் சூழ்ந்திருந்தனர்.

11) ………….. அவர்களைப் பாதுகாப்புடன் வாழவிடுகிறார்: அவர்களும் அதில் ஊன்றி நிற்கிறார்கள்: இருப்பினும் அவரது கண் அவர்கள் நடத்தைமேல் உள்ளது.

12) அப்படியிருக்க, வெற்றுமொழியால் நீர் என்னைத் தேற்றுவதெப்படி? ……… மறுமொழி முற்றிலும் பொய்யே!

14) அவர்களின் அழிவை அவர்களின் கண்களே காணட்டும்: ……….. வல்லவரின் வெஞ்சினத்தை அவர்கள் குடிக்கட்டும்.

**இடமிருந்து வலம்**

1) பின்னர் அவருடைய எல்லாச் சகோதரர்களும், சகோதரிகளும், அவரை முன்பு தெரிந்திருந்த ………… அவரிடம் வந்தனர். அவரது இல்லத்தில் அவரோடு விருந்துண்டனர்:





**முதல் வாசக முன்னுரை**

இஸ்ரயேல் மக்களின் முப்பெரும் விழாக்களில் ஒன்று பெந்தகோஸ்து விழா. மீட்பின் வரலாற்றில் இந்நாளில்தான் சீனாய் மலையில் பத்துக் கட்டளைகளையும், யாவே இறைவனோடு இஸ்ரயேல் மக்கள் செய்த உடன்படிக்கையின் உறவையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். எனவே இவ்விழாவை சிறப்பிப்பதற்காக வெளிநாடு வாழ் யூத மக்களும், யூதம் தழுவியோரும் எருசலேமில் ஒன்றாய்க் கூடியிருப்பர். சீடர்கள் தூய ஆவியை இந்நாளில் பெற்றதன் வழியாக இது கிறிஸ்துவ விழாவாக்கப்பட்டுள்ளது. புனித பேதுருவின் பேச்சினால் தூய ஆவியாரின் தூண்டுதலின் பொருட்டு முதல் கிறிஸ்தவர்களைப் பெற்றதும் இந்நாளில்தான். நமது விசுவாச மரபுப்படி இந்நாளில்தான் தூய ஆவியைத் திருத்தூதர்கள் பெற்றதாக நம்பப்படுகிறது. திருஅவையின் பிறப்பு நாளாகிய இன்று அதே ஆவியாரால் நாம் நிரப்பப்பட வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

தந்தையின் விருப்பங்களை இம்மண்ணுலகில் நிறைவு செய்வதற்கு அனைத்து துன்பங்களையும் தாங்கிக் கொள்ள பக்குவப்பட்ட மனநிலையை தூய ஆவியின் வழியாகவே இறைமகன் இயேசு பெற்றுக்கொண்டார். விண்ணகம் சென்ற இயேசு ஆவியானவரை அனுப்பினார். அவரும் மிகுந்த வல்லமையோடு இறங்கி வந்தார். பயந்து நடுங்கிய திருத்தூதர்கள் துணிவோடு போதிக்கவும், பல மொழிகளில் பேசவும் தொடங்கினர். வலுவற்ற நிலையில் இருந்த அவர்களுக்கு தூய ஆவியானவர் துணை நின்றார். தூய ஆவியின் கொடைகளைப் பெற்றவர்கள் சோதனைகளைக் கடந்து, சாதனைகள் படைப்பார்கள். அத்தகைய ஆவியானவர் நமக்கு ஆற்றல் தந்து நமது ஆன்மீக வாழ்வில் வலிமைக்கான அவரது துணை வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள்,இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியின் கொடைகளையும் அவரது கனிகளையும் பெற்று உறுதியோடு தங்களது அழைத்தலில் நிலைத்திலிருந்து கிறிஸ்துவின் நற்செய்திக்கு சான்று பகர துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. தூய ஆவியானவரை எங்களுக்கு வழங்கும் இறைவா! உமது ஆவியின் கொடைகளால் நிரப்பப்பட்ட நாங்கள் அனைவரும் எங்களிடையே இருக்கின்ற வேற்றுமைகளையும் வேறுபாடுகளையும் கலைந்து ஒற்றுமையோடும் சகோதரத்துவத்தோடும் வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஆவியின் ஊற்றே எம் இறைவா! உமது ஆவியின் துணையால் எல்லா விதமான பயத்திலும், நம்பிக்கையற்ற வாழ்க்கை முறையிலிருந்து விடுதலை பெற்று மனவலிமையோடும் மனதிடத்தோடும் வாழத் தேவையான அருள்வரங்களை எங்களில் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஒற்றுமையின் இறைவா! பெந்தகோஸ்து பெருவிழாவாகிய இன்று பல காரணங்களால் பிரிந்திருக்கின்ற பிற சபை சகோதர சகோதரிகள் அனைவரும் ஆவியாரின் வழிநடத்துதலால் ஒரே திருஅவையாக, கூட்டுத் திருஅவையாக பயணிக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

வாழ்வில் செயல்பட வேண்டும் என்பதை பவுலடியார் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார். ஆவியானவர் நமது துணையாளராகவும், இறைத்திட்டம் அனைத்தையும் அறிவுறுத்துகிறவராகவும் செயல்படுகின்றார். ஆவியானவரை நமது வாழ்வில் கொண்டு புதிய வாழ்வு இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. அன்பே உருவான இறைவா! உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள்,இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இயேசு விட்டுச் சென்ற அவரது நற்செய்தி பணியை செவ்வனே செய்திட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா! இயேசு விண்ணகம் சென்ற இடத்திற்கு நாங்களும் ஒருநாள் செல்வோம் என்ற நம்பிக்கையோடு இயேசுவின் போதனைகளை வாழ்வாக்கிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. இறையழைத்தலின் பிறப்பிடமே எம் இறைவா! திருஅவையில் இறையழைத்தல் பெருகவும், அதன் வழியாக இயேசுவைப்பற்றிய நற்செய்தி உலகெங்கும் அறிவிக்கப்படவும் இளையோரின் மனங்களை நீர் ஆட்கொண்டு தங்களையே உமக்காக முழுமையாக அர்ப்பணிக்க முன்வர தேவையான அருள்வரங்களை எங்களில் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா! நாங்கள் அனைவரும் எங்களது பழைய பாவ வாழ்வை விட்டுவிட்டு விண்ணக வாழ்விற்கு வந்துசேர உமது அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## தூய ஆவியார் பெருவிழா (08-06-2025)

### திப 2:1-11; உரோ 8:8-17; யோவா 14:15-16, 23-26

### திருப்பலி முன்னுரை

திருஅவை இன்று தூய ஆவியாரின் பெருவிழாவைக் கொண்டாடுகிறது. இன்றுதான் திருஅவையின் பிறந்த நாள். கிறிஸ்து வாக்களித்தவாறே அவர் விண்ணகம் சென்ற பத்தாம் நாள் தம் சீடர்கள் மீது தூய ஆவியைப் பொழிந்தார். இந்த சிறப்புமிக்க நாளில்தான் பேதுரு ஆற்றிய அருளுரையைக் கேட்டு மூவாயிரம் பேர் திருமுழுக்குப் பெற்றனர். அத்தகைய சிறப்பான நிகழ்வை இன்று திருஅவையோடு இணைந்து கொண்டாட அழைக்கப்படுகின்றோம்.

மனித வாழ்வு வளர்ச்சியை நோக்கி பயணம் செய்யும் போது அவ்வப்போது தடுமாற்றம், மேடு பள்ளங்களைச் சந்திக்கின்றோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மை வழிநடத்த ஒரு துணை தேவைப்படுகிறது. அந்த துணையாளர்தான் தூய ஆவியானவர். தடுமாறும் மனிதனை, பாதை மாறி செல்லும் மனிதனை இயேசுவிடம் அழைத்துச் செல்லும் மகத்தான பணியை சிறப்பாக செய்பவர் தூய ஆவியானவர். தூய ஆவியானவர் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலம்.

ஆதிக்கிறிஸ்தவர்கள் ஒரே மனம், ஒரே உள்ளம், கூடி செபித்தல், தேவைக்கு ஏற்ப பகிர்தல் இவைகள் அனைத்தையும் செயலாக்கம் பெறச் செய்தது தூய ஆவியின் ஆற்றலே. அவர்களின் அகத்திலிருந்து தூய ஆவியின் ஆற்றல் செயல்பட்டதால்தான் பல இடங்களுக்குச் சென்று போதித்தனர். பல்வேறு காரணங்களால் பிளவுபட்டுள்ள இன்றைய உலகில் கிறிஸ்தவர்கள் அனைவரும் அன்பினாலும், ஒற்றுமையினாலும் மட்டுமே இயேசுவுக்கு சாட்சியம் பகிர முடியும். எனவே நம்மில் இருக்கும் வேறுபாடுகள் மறைந்து, ஒற்றுமையையும் நிறை உண்மையையும் நிறை வாழ்வையும் நோக்கி வழிநடத்தப்பட வேண்டி தூய ஆவியானவரின் துணை வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.





2) எக்காளம் முழங்கும்போதெல்லாம் 'ஐஇ' என்னும் தளபதிகளின் இடி முழக்கத்தையும் ………… அப்பால் போரினையும் இப்பாலே மோப்பம் பிடிக்கும்.
5) வலியோரை நொறுக்குவதற்கு அவர் ஆய்ந்தறிசு செய்யத்தேவையில்லை…………. இடத்தில் பிறரை அமர்த்துவார்.
6) அவர் மானிடர்க்குக் கூறினார்: ஆண்டவர்க்கு அஞ்சுங்கள்: அதுவே ………… தீமையை விட்டு விலகுங்கள்: அதுவே அறிவு.
9) கடவுள் இறைப்பற்றில்லாதோரை …………. அவர்களின் உயிரைப் பறிக்கும்போது, அவர்களுக்கு என்ன நம்பிக்கை?
10) அப்படியெனில், எப்படி ………… கடவுள்முன் நேரியவராய் இருக்க முடியும்? அல்லது பெண்ணிடம் பிறந்தவர் எப்படித் தூயவராய் இருக்கக் கூடும்
13) ஆகையால்…………… நடுங்குகின்றேன்: அவரைப்பற்றி நினைக்கையில் திகிலடைகின்றேன்.

### மேலிருந்து கீழ்

2) ………… படைப்புகளில் தலையாது அதுவே! பட்டயத்துடன் நெருக்க முடியும்.
3) அவனியின் பரப்பை நீ ஆய்ந்தறிந்ததுண்டா? அறிவிப்பாய் அதிலுள்ள………. அறிந்திருந்தால்!
6) வயதானோர் எல்லாம் ……….. இல்லை: முதியோர் நீதியை அறிந்தவரும் இல்லை.
7) அகன்ற உடைப்பில் நுழைவது போலப் பாய்கின்றனர்: இடிபாடுகளுக்கு இடையில் ………… வருகின்றனர்.
11) அவரை எங்கே கண்டுபிக்கலாமென நான் அறிய யாராவது உதுவுவாரானால், நான் அவர் இருக்கையை ……………
14) ஏனெனில், இருள் …………..மறைக்கிறது: காரிருள் என் முகத்தைக் கவ்வுகிறது.

### கீழிருந்து மேல்

1) பறவைபோல் துள்ளி…………ஆடுவாயா? உம் மகளிர்க்கென அதனைக் கட்டிவைப்பாயா?
4) நீர் பாவம் ………… அவருக்கெதிராய் என்ன சாதிக்கின்றீர்? நீர் மிகுதியான குற்றங்களைச் செய்வதால் அவருக்கு என்ன செய்து விடுகின்றீர்?
5) கனவில், இரவின் காட்சியில் ஆழ்துயில் மனிதரை ஆட்கொள்கையில்: படுக்கையில்………… அயர்ந்து உறங்குகையில்,
8) என் வலப்பக்கம் கும்பல் கூடுகின்றது: என்னை நெட்டித் தள்ளுகின்றது: அழிவுக்கான…………….எனக்கெதிராய் வகுத்தது.
9) கீழ்உலகின் ஆவிகள் நடுங்குகின்றன: நீர்த் திரள்களும் ……….. வாழ்வனவும் அஞ்சுகின்றன.
13) அவர்கள் இறைவனிடம் எங்களைவிட்டு ……….. எல்லாம் வல்லவர் எங்களுக்கு என்ன செய்யமுடியும்? என்பர்.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-05-2025

# மன்றாட்டு

24



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

இரக்கப் பெருக்கம் மிகந்த தாயே
நெருக்கம் உந்தன் பாதம் வந்தோம்
உம்மை அல்லாமல் வேறு தெய்வம்
உலகில் யாரும் இல்லை அம்மா
    உரியோர் உறவோர் இருந்தும் கூட
    உம்மைப் போன்றோர் யாரும் இல்லை
    உந்தன் அன்பை தேடி வந்தோம்
    உந்தன் அண்டை கூடி வந்தோம்
இரந்து கேட்கும் தயையை எதுவும்
மறந்து விட்டதன் தருணம் இல்லை
வியந்து நின்று பார்த்தவர் தம்
விளம்பரம் தான் விரலில் இல்லை
    நம்பி வந்த யாரையும் நீர்
    இம்மி கூட கைவிட்டதாக யாரும்
    சொல்லி விட நாங்கள் கேட்டதில்லை
    சல்லி கூட எதுவும் சாட்சியில்லை
மாசு மருவோ எதுவும் இன்றி
தேசம் வந்த ஈசன் தாயே!
நேசர் நாங்கள் வேண்டும் எதையும்
நேசர் பதமே சேர்த்திடு அம்மா
    வார்த்தை வடிவை வார்த்த தாயே
    வாழ்க்கை சிறக்க வழி புரிவாயே
    நீர்த்துப் போகும் தருணம் எல்லாம்
    சேர்த்து எம்மை துணை புரிவாயே





ஈடுபட உமது அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அமைதியின் நாயகனே எம் இறைவா! பல காரணங்களால் பிரிந்திருக்கின்ற குடும்பங்கள் உமது அருளால் இணைந்து அவர்கள் அனைவரும் நீர் தருகின்ற சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் பெற்று வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நம்பிக்கையின் ஊற்றே இறைவா! நாங்கள் அறிக்கையிடுகின்ற, கொண்டாடுகின்ற, கடைபிடிக்கின்ற, செய்கின்ற விசுவாசத்தை வாழ்வாக்கிட எங்களுக்குத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## ஆண்டவரின் விண்ணேற்றம் (01-06-2025)

### திப 1:1-11; எபி 9:24-28, 10:19-23; லூக் 24:46-53

### திருப்பலி முன்னுரை

இன்று தாய் திருஅவையானது இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழாவைச் சிறப்பிக்கின்றது. இயேசு உயிர்த்தப்பின் 40 நாட்கள் தன்னுடைய திருத்தூதர்களை தூய ஆவியைப் பெற்றுக்கொள்ள தயார் செய்த பின்பு இயேசு விண்ணகம் சென்றார். இயேசு விண்ணகம் சென்றது இவ்வுலக வாழ்வின் இன்ப துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவதற்காக அல்ல மாறாக, நமது தலைவரும் முதல்வருமாகிய அவர் சென்ற அதே இடத்திற்கு நாமும் ஒருநாள் செல்வோம் என்ற நம்பிக்கையை உருவாக்குவதற்கே. கிறிஸ்துவின் விண்ணக மகிமையில் நாமும் ஒருநாள் பங்குபெறுவோம் என்பது உறுதி. கிறிஸ்து விண்ணகம் சென்று, அங்கு நமக்காக ஓர் இடத்தை ஏற்பாடு செய்தபின், திரும்பி வந்து நம்மையும் அழைத்துக் கொண்டு போவார். அப்போது அவர் இருக்கும் இடத்திலேயே நாமும் இருப்போம் என்பது நமது நம்பிக்கை.

இயேசு விண்ணேற்றமடைந்த பொழுது தன்னுடைய சீடர்களை அவரது இறையரசுப் பணியின் சாட்சிகளாக உலகமெங்கும் இருக்க வேண்டும் என்பது கிறிஸ்துவின் விருப்பமாக இருப்பதாக இன்றைய நற்செய்தி நமக்கு சொல்கிறது. நாமும் விண்ணகம் சென்ற இயேசு மீண்டும் வருவார் என்று நம்பிக்கையோடு இயேசு விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து ஆற்றுவது நமது கடமை. அவர் நமக்கு விட்டுச் சென்ற பணிகள், படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள், எல்லா இனத்தாரையும் என் சீடராக்குங்கள், மண்ணுலகின் இறுதி எல்லைவரை என் சாட்சிகளாய் இருங்கள், பேய்களை விரட்டுங்கள், நோய்களை குணமாக்குங்கள் என்பவற்றை வாழ்வாக்கிட இறையருளை வேண்டி இணைவோம் இத்திருப்பலியில்.

### முதல் வாசக முன்னுரை

இயேசு உயிர்த்தப்பின் 40 நாட்கள் உலகிலேயே இருந்து அவ்வப்போது ஆங்காங்கே தோன்றி காட்சி அளித்தார். இந்த உயிர்த்த இயேசுவின் காட்சிகள் இயேசு உயிர்த்துவிட்டார். மீண்டும் தொடர்ந்து வாழ்கின்றார் என்ற மாபெரும் உண்மைக்கு அடையாளங்களாகவும் சான்றுகளாகவும் விளங்கின. இயேசு தான் விண்ணகம் செல்லுமுன் தூய ஆவியாரை அனுப்பப்போவதாக வாக்களித்து செல்கிறார். தன்னுடைய உதவி ஆவியானவரின் வழியாக என்றுமே தொடரும் என்று வாக்குறுதி தந்துவிட்டு இயேசு செல்கிறார். விண்ணகம் சென்ற இயேசு மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையோடு நற்செய்தி பணியில் ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்திட இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவ அழைப்பைப்பற்றி சில ஆழந்த கருத்துக்களை புனித பவுலடியார் தெரிவிக்கின்றார். தூய ஆவியார் எந்த அளவுக்கு நமது கிறிஸ்தவ

வழிகள்தானா என்று கேள்வியை எழுப்புகின்றபோது இல்லை என்ற பதில்தான் கிடைக்கிறது.

அமைதியை நிலைநாட்ட இவ்வுலகம் பின்பற்றும் வழியானது சமரச வழி. சண்டை போடும் இரு நபர்கள் அல்லது இரு நாடுகள் சமரசமாக இருக்க அழைக்கப்படுகின்றனர். அதுமட்டுமல்லாமல், வலிமை நிறைந்த நாடுகள் முன்பு வலிமையற்ற நாடுகள் அடங்கி ஒடுங்கிப்போவது அமைதிக்கு அடையாளமகக் கருதப்படுகிறது. ஆனால் உயிர்த்த ஆண்டவர் தர விரும்பும் அமைதியோ இப்படிப்பட்ட அமைதி அல்ல. அதாவது சமரச அமைதி அல்ல, அடக்குமுறையின் முன்னால் அடங்கிப் போவதன் காரணமாக வருகின்ற அமைதியுமல்ல. மாறாக, நீதிக்கான போராட்டத்தின் காரணமாக வருகின்ற அமைதி. நீதியின்றி நிலையான அமைதியை நிறுவ முடியாது என்பதே இயேசு கற்றுத்தரும் பாடம். குடும்பங்களிலும், திருஅவையிலும் அமைதி நிலவ விரும்பும் நாம், அவ்வமைதியை நிலைநாட்டும் முயற்சியில், ஏற்றத்தாழ்வுகளை கலையாமல் சமரச முயற்சியில் ஈடுபடுகிறோம். அதுமட்டுமல்லாமல், அதிகாரத்தையும், அடக்கு முறையையும் பயன்படுத்தி அமைதியை ஏற்படுத்துகின்றோம். இவைகள் அனைத்தும் சரியான வழிகள் அல்ல. அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றால் நீதிக்கான தேடலில் இறங்குவது அவசியமானது. எனவே நீதியோடும் நேர்மையோடும் நமது வாழ்வை அமைத்துக்கொள்ளும் போது நிலையான அமைதி நமது வாழ்வில் செழித்தோங்குகிறது. எனவே உண்மையோடும், நீதியோடும், நேர்மையோடும் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

புற இனத்தவர்கள் கட்டாயம் விருத்தசேதனம் செய்துகொள்ள வேண்டுமா என்பதை வைத்து பிரச்சனை எழுந்தபோது, எருசலேம் சங்கத்தார் சமரச வழியின் மூலம் ஒரு முடிவுக்கு வர விரும்பவில்லை. எல்லாரையும் திருப்திப்படுத்தவும் முனையவில்லை. மாறாக, பெரும் கருத்து வேறுபாடு மற்றும் நெடுநேர விவாதத்திற்குப் பின்பு எது நீதியான, சரியான முடிவோ அதை எடுத்து அமைதியை நிலைநாட்டுகின்றனர். நாமும் நமது அனுதின வாழ்வில் சமரச முயற்சிகளில் அமைதியை ஏற்படுத்த முயலாமல் நீதியை அடிப்படையாகக் கொண்டு அமைதியை ஏற்படுத்த இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

யோவான் தனது காட்சியில் திருஅவையாகிய விண்ணக எருசலேமைக் காண்கின்றார். இந்தக் காட்சியானது எசேக்கியல் இறைவாக்கினர் முன்னறிவித்ததை மற்றொருமுறை படம்பிடித்துக் காட்டுகின்றது. பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்களும் வேறுபாடுகளைக் களைந்து அமைதியில் வாழ்வதாக வலியுறுத்துகின்றது. உயிர்த்த கிறிஸ்து திருத்தூதர்களின் துணையோடு திருஅவையை வழிநடத்திச் செல்கின்றார். இன்றும் அதே உயிர்த்த ஆண்டவர் நம்மையும் வழிநடத்த வேண்டுமென்று இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. திருஅவையை வழிநடத்தும் எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உயிர்த்த ஆண்டவரின் சமாதானத்தை நிறைவாக பெற்று நீதியோடும் அன்போடும் வாழ்ந்திட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. நல்ல ஆயனே எம் இறைவா! இந்த உலக அரசியல் மற்றும் சமூக தலைவர்கள், இவ்வுலகில் அமைதியை நிலைநாட்ட சமரச வழியை நாடாமல், நீதியின் வழியில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அவர்கள்



மரிவழி இறைப்பணி

# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

**பாஸ்கா காலம் 4 ஆம் ஞாயிறு (11-05-2025)**
**திப 13:14,43-52; திவெ 7:9,14-17; யோவா 10:27-30**

### திருப்பலி முன்னுரை

பணத்திலும் பதவியிலும் பாதுகாப்பு தேடுவதைவிட இறைவனில் தங்களது பாதுகாப்பைத் தேடுபவர்கள், துன்பத்திற்கு மத்தியிலும் மகிழ்ச்சியாய் இருப்பர். இன்றைய சூழ்நிலையில் இந்தியா உட்பட எல்லா நாடுகளையும் ஆட்டிப்படைக்கும் மனவியாதி, பாதுகாப்பின்மை, வேலையின்மை, விலைவாசி உயர்வு, தீவிரவாதம் போன்றவற்றின் காரணமாக நாளைய பொழுது நன்றாக இருக்குமா? என் சொல்ல முடியாத நிலை. பணமும் தொழிலும் இல்லாதவர்கள் நாளைய பொழுதை கழிப்பதெப்படி? என்ற கவலையில் இருக்கின்றனர். பணம் உள்ளவர்களோ அதை எப்படி பாதுகாப்பது என்ற கவலையில் இருக்கின்றனர். மொத்தத்தில் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு பாதுகாப்பின்மை உணர்வு எல்லாரையும் ஆட்டிப்படைக்கின்றது. இந்த பாதுகாப்பின்மை உணர்வு பொருளாதாரத் தளத்தில் மட்டுமல்ல மாறாக உளவியல் தளத்தில் மிக அதிகமாக காணப்படுகிறது. என்னை யாரும் அன்பு செய்வதில்லை, என்னை ஏற்றுக்கொள்ள யாரும் தயாராக இல்லை, என்னை யாரும் கண்டுகொள்ளவில்லை என்று புலம்பி கண்ணீரிலும், கவலையிலும் ஒவ்வொரு நாளும் வாடிக் கொண்டிருக்கும் நபர்கள் ஏராளம். இப்படிப்பட்ட பாதுகாப்பின்மை உணர்வு பதற்றம், மனக்கவலை, பொறாமை, பதைபதைப்பு போன்ற தீமைகளுக்கு இட்டுச் செல்கின்றது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இயேசுவின் இனிய வார்த்தைகள் இன்றைய நற்செய்தி வழியாக நமக்கு வருகின்றன. பிறர் நம்மை புரிந்துகொள்ளாமலும், அன்பு செய்யாமலும் இருந்தாலும் நாம் இறைவனுக்கு சொந்தமானவர்கள், நம்மை இறைவன் பாதுகாக்கின்றார் என்ற உணர்வோடு இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

பவுல் மற்றும் பர்னபா நற்செய்தி அறிவிக்கச் சென்ற இடங்களிலெல்லாம் எதிர்ப்பு கிளம்பியது. இருப்பினும் பல்வேறு துன்பங்கள் இன்னல்கள் மத்தியிலும் இவர்கள் மகிழ்ச்சியில் நிலைத்திருந்ததாக இன்றைய முதல் வாசகம் கூறுகிறது. காரணம், தன்னை இறைவன் பாதுகாத்து வருகின்றார். உயிர்த்த இயேசு தன்னோடு இருக்கிறார் என்ற உணர்வு இருந்ததால்தான். நாமும் அத்தகைய இறைஉணர்வோடு வாழ வரம் வேண்டி இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

உலக வாழ்வின் மீது வெற்றி பெற்று விண்ணக வாழ்வு அடைந்தோரைப் பற்றியதே இன்றைய இரண்டாவது வாசகத்தில் வருகின்ற காட்சி. இயேசு கிறிஸ்துவின் பால் தாங்கள் கொண்டிருந்த அன்னை முன்னிட்டு உரோமைக் கிறிஸ்தவர்கள் தங்கள் உயிரையே தியாகம் செய்தார்கள். செம்மறியின்

இரத்தமே அவர்களுடைய ஆடைகளை வெண்மை ஆக்கியது. அதாவது அவர்கள் பெற்ற வெற்றிக்கு காரணம், இரத்தம் சிந்திய இயேசு கிறிஸ்துவைப் போன்று அவருக்காகத் தாங்களும் இரத்தம் சிந்தியதே. நாமும் கிறிஸ்துவுக்காக வாழ, நம்மையே நாம் இழக்க வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. திருஅவையை வழிநடத்தும் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தங்களது நம்பிக்கை வாழ்வில் உயிர்த்த ஆண்டவரின் அனுபவத்தை பெற்று, அவருக்கு சாட்சிகளாக வாழத் தேவையான அருளை அனைவருக்கும் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அஞ்சாதீர்கள், நான் உம்மோடு இருக்கிறேன் என்று மொழிந்த எம் இறைவா! உம் பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் எங்களது அனுதின வாழ்வில் தேவையற்ற பயத்தை தவிர்த்து உயிர்த்த ஆண்டவர் எந்நாளும் எம்மோடு பயணிக்கின்றார் என்ற இறைவிசுவாசத்தோடு வாழத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. நல்ல ஆயனே எம் இறைவா! எமது அரசியல், ஆன்மீக, சமூகத் தலைவர்கள் அனைவரும் தங்களது மக்களின் மீது அக்கறை கொண்டு அவர்களை நல்வழி நடத்தும் நல்ல தலைவர்களாக வாழ அவர்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. சமாதானத்தின் நாயகனே எம் இறைவா! உலகில் நிகழும் பல்வேறு கலவரங்கள், போர், வன்முறை போன்ற அனைத்தும் மறைந்து உம் திருமகன் வாக்களித்த அந்த நிலையான அமைதியை உலக மக்கள் அனைவரும் முழுமையாக சுவைக்கத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பாஸ்கா காலம் 5 ஆம் ஞாயிறு (18-05-2025)

**j p 14:21-27; திவெ 21:1-5; யோவா 13:31-35**

### திருப்பலி முன்னுரை

சிலுவை மரணத்தின் வழியாகவே இயேசு மகிமை பெற்றார். எனவே தன் பிரிவு பற்றி உள்ளம் கலங்காது, யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுக்கப்போவது பற்றி சோர்வடையாது, தான் மகிமை பெறும் நேரம் வந்த மகிழ்ச்சியில் சீடர்கள் மனநிறைவு கொள்ள வேண்டும் என்து ஆண்டவரின் போதனையாகும். தான், தனது சீடர்களை அன் செய்தது போல அவர்களும் ஒருவர் மற்றவர்களுக்கும் அன்பு செய்ய வேண்டும் என்ற புதிய கட்டளையை அவரது இறுதியுரையின் முக்கிய அம்சமாகும். கடவுள் அளித்த கட்டளைகள் பத்து என்றும், அவை அனைத்தும் இறையன்வு, பிறரன்பு ஆகியவற்றில் அடங்கும் என்று நாம் அனைவரும் அறிந்ததே. தலையாய கட்டளை இறையன்பும் பிறரன்பும் என்று இயேசு பலமுறை தனது போதனைகளில் கூறியுள்ளார். தன் இறுதியுரையில் இந்த இரு அன்பினையும் ஒரே கட்டளையில் அடக்கிவிடுகிறார் இயேசு. நான் உங்களுக்கு அன்பு செய்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள் என்று ஓர் புதிய கட்டளையை தருகின்றார். இயேசு தந்தையின் அன்பை நமக்குத் தந்தார். நாமும் அவரது அன்பை பிறருக்குத் தர அழைப்பு விடுக்கின்றார். தன்னையே இயேசு நமக்காகப் பலியாக்கினார். தன்னையே அழித்துக்கொள்ளும் அளவுக்கு நம்மீது அன்பு செலுத்தினார். பிறர் அன்பில் தம்மையே பலியாக்கத் தயாராயிருக்கும் தியாக வாழ்வை நம்மிடம் இயேசு எதிர்பார்க்கிறார்.

இயேசுவின் அன்பு அனைவரையும் தழுவியது. எவரையும் அவர் இகழ்ந்து ஒதுக்கவில்லை. நம்மிடமிருந்து எந்த நன்மையையும் அவர் எதிர்பார்க்கவில்லை. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோர், பாவிகளாக





எண்ணப்பட்டோர் போன்றவர்களைத் தேடிப் பிடித்து, தம் அன்பைப் பொழிந்தார். அவரைப்போல கைமாறு எதிர்பாராது தியாக மனப்பான்மையுடன் பிறர்மீது அன்பு செலுத்தும்போதுதான் நாமும் அவரது உண்மையான சீடர்களாக மாறுகின்றோம் என்ற உணர்வோடு இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

இயேசுவுக்காக எதிர்ப்புகளை ஏற்பதையும் அடி உதைகளைத் தாங்குவதையும் ஒரு சிறப்பு அம்சமாகவே கருதினார் புனித பவுல் அடிகளார். காரணம் உலகை மீட்க வந்த இயேசு கிறிஸ்துவும், சிலுவை மரணம் அடைந்துதான் தன் மீட்புப் பணியைச் செய்து முடித்தார் என்பதை அவர் அறிந்திருந்தார். இயேசுவின் உண்மையான சீடருக்கு நற்செய்தி அறிவித்தல் ஒரு தலையாய கடன். இப்பணியை நாம் செய்யும்போது கடவுள் நமக்குத் துணை நிற்கின்றார். அரும்பெரும் செயல் பல புரிகின்றார். நாமும் இறைவனும், நாமும் கிறிஸ்துவும், நாமும் தூய ஆவியாரும் இணைந்து செய்யும் பணியே நற்செய்திப் பணி என்பதை உணர்ந்து இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

உலகிலே நீதிக்கும் அநீதிக்கும், உண்மைக்கும் பொய்க்கும், நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் உண்மையும் நன்மையும் வெல்லும். உலக நிகழ்ச்சிகள் அனைத்தையும் திருஅவையின் இறுதி வெற்றிக்குத் துணைபுரியும் வகையில் இயேசு ஆண்டு நடத்தி வருகின்றார் என்பதை திருவெளிப்பாடு விளக்குகிறது. பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாகும் இன்றைய திருஅவை விண்ணக எருசலேமாக மாறும் என்ற நம்பிக்கை கீதமே இன்றைய இரண்டாம் வாசகம். கவனமுடன் செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது புதிய அன்பு கட்டளையை வாழ்வாக்கி உமது அன்பில் நிலைத்து நின்று உமது அன்பு சீடர்களாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்
2. நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா! எங்களது கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் ஒருபோதும் நாங்கள் உமது உயிர்ப்பின் மீது கொண்டுள்ள விசுவாசத்தை இழந்துவிடாமல் விண்ணக எருசலேம் நோக்கி நம்பிக்கையுடன் பயணிக்கத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. ஆற்றலின் ஊற்றே எம் இறைவா! எங்களது அனுதின வாழ்வில் உமது வார்த்தையை வாசித்து, அதை தியானித்து, அவ்வார்த்தையை பிறருக்கு எவ்வித பயமுமின்றி அறிவிக்க எங்களுத் தேவையான உமது ஆற்றலை நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. இரக்கத்தின் இறைவா! உமது திருமகனின் உயிர்ப்பு இவ்வுலகிற்கு மீட்பைக் கொண்டுவந்ததுபோல எங்களது கிறிஸ்தவ வாழ்வு பிறருக்கு நம்பிக்கைளையும் இவ்வுலகிற்கு இறை பிரசன்னத்தையும் தருகின்ற வாழ்வாக அமைய வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பாஸ்கா காலம் 6 ஆம் ஞாயிறு (25-05-2025)

**திப 15:1-2, 22-29; திவெ 21:10-14, 22-23; யோவா 14:23-29**

### திருப்பலி முன்னுரை

அமைதியை விரும்பாதவர் இவ்வுலகில் யாருமே கிடையாது. போர்களும், வன்முறைகளும், தீவிரவாத தீய சிந்தனைகளும், குழப்பங்களும் மேலோங்கியுள்ள இந்நாட்களில் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் அவ்வப்போது எடுக்கப்படுகின்றன. இவ்வாறு அமைதியை நிலைநாட்ட மனிதனால் பல முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், அவையெல்லாம் சரியான